பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 09 வியாழக்கிழமை 26.09.2019 | கதிர் 325

### இது ரகசியம் அல்ல!

முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி கடந்த திங்களன்று தேரரின் உடல் தகனம் செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து வடக்கில் தமிழ் அச்சு ஊடகங்களிலும் தமிழ் இணையத் தளங்களிலும் இரண்டு

பக்கம் 02

# ரணில் – சஜித் இணக்கத்தில் நேற்று மீண்டும் பிணக்கு!

## நிபந்தனைகள் முன்வைத்ததால் முற்றியது கடும் முறுகல் நிலை



கொழும்பு, செப். 26

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நிறுத்துவதற்கு நேற்று முன்தினம் ஏற்பட்ட கொள்கையளவிலான இணக்க நிலை பிரதமரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கடுமையான நிபந்தனைகளால் மீண்டும் பிணக்கை ஏற்படுத்தியிருக்கின்றது.

பக்கம் 03

## சஜித் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டார் திஸ்ஸ!



கொழும்பு, செப். 26

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படும் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ

பக்கம் 03

## பங்காளிக் கட்சிகளுடன் சஜித் நேற்று ஆலோசனை

கொழும்பு, செப். 26

அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளும் இடையில் நேற்றுக் காலை முக்கிய கலந்துரையாடல்

பக்கம் 03

## ரயில்வே ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, செப். 26

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று நள்ளிரவு முதல் ரயில்வே ஊழியர்கள் பணிப்

பக்கம் 02

## தியாகி திலீபன் நினைவேந்தல் இன்று நாவற்குழியில் அணி திரள அழைப்பு



யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபன் திலீபனின் இறுதி நாள் நிகழ்வு இன்று காலை நல்லூரில் அமைந்

பக்கம் 03

## பிக்குகள் அடாவடிக்கு பொலிஸ் துணை அனைவரையுமே கைதுசெய்யவேண்டும்

### வலியுறுத்துகின்றார் மாவை சேனாதிராசா



யாழ்ப்பாணம், செப். 26

நீதிமன்றக் கட்டளையை மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த மதகுருவின் உடலை எரித்தது இனநல்லிணக்கத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாகும். அதற்கு உடந்தையாகவும் இன மத முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் பொலி

பக்கம் 03

## நீராவியடி விடயத்தில் நீதி கிட்டாவிடின் விபரீத விளைவை அரசு எதிர்கொள்ளும்

### ரெலோ செயலாளர் நாயகம் சிறிகாந்தா எச்சரிக்கை



யாழ்ப்பாணம், செப். 26

பண்டாரவன்னியன் ஆண்ட மண்ணில் சண்டாளச் சேனை அடாவடி செய்வதற்கு அனுமதிக்க முடியாது.எனவே நீராவியடி விவகாரத்துக்கு காலம் தாழ்த்தாது நீதியை நிலைநாட்ட அரசு தவறினால் அடுத்து விளைவுகள் விபரீதமாகுமெனத் தமிழீழ

பக்கம் 03

## ரணிலைப் பிரதமராக்கிய நாமே வெட்கித் தலைகுனியவேண்டும்

### நீராவியடிப் பிரச்சினை குறித்து தவராசா கருத்து

யாழ்ப்பாணம், செப். 26

முல்லைத்தீவு நீராவியடிப் பிரச்சினை சட்ட ரீதியான பிரச்சினை அல்ல. அது அரசியல் ரீதியான பிரச்சினை. சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த வேண்டிய பிரதமர் ரணில் இந்தச் சம்பவத்தால்

பக்கம் 03

## ஸ்காபரோ விபத்தில் தமிழ் இளைஞர் பலி!



ஸ்காபரோ, செப். 26

கனடாவில் ஸ்காபரோ பகுதியில் கடந்த திங்கள் இரவு விபத்தில் உயிரிழந்த தமிழ் இளைஞன் உறவினர்கள்

பக்கம் 03

## புலிகளுக்குப் பயந்து ஒளிந்தவர் கோட்டா!

### சுஜீவ சேனசிங்க தகவல்



கொழும்பு, செப். 26

விடுதலைப் புலிகளுடனான போரின்போது கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறி ஒரு கோழை

பக்கம் 02

## முல்லைத்தீவு நீதிமன்று முன் சட்டத்தரணிகள் கவனவீர்ப்பு



முல்லைத்தீவு, செப். 26

முல்லைத்தீவு மாவட்ட, நீதவான் நீதிமன்றம் முன்பாக முல்லைத்தீவு நீதிமன்றச் சட்டத்தரணிகள் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்

பக்கம் 03

## திருகோணமலை விகாரையில் இரு புத்தர் சிலைகள் உடைப்பு!



திருமலை, செப். 26

திருகோணமலையில் உள்ள விகாரை ஒன்றில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட

பக்கம் 03

# நாடு தழுவிய சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்கு வடக்கு அதிபர், ஆசிரியர்கள் வலுச்சேர்க்கவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 25

நாடு தழுவிய ரீதியில் இடம்பெறவுள்ள சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண அதிபர்களுக்கும் ஆசிரியர்களும் வலுச்சேர்த்து ஆதரவு வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர்சேவைசங்கம்விசேடஅழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் இலங்கையில், ஆசிரியர் – அதிபர்களின் உரிமைகளைப் பெறப் பரவலாக பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. முக்கியமாக, சம்பள முரண்பாடுகளை நீக்காமை, நிலுவைச் சம்பளத்தை வழங்காமை, மாணவர் ஒழுக்கத்தைப் பேணும் ஆசிரியர்களைப் பாதுகாக்காமை, ஆசிரியர்களுக்கு மேலதிக வேலைகளை வழங்குதல், 2016 ஆம் ஆண்டு முதல் ஓய்வுதியத்தை நிறுத்தியமை. பெற்றோரிடமிருந்து பணம் அறவிடல் முதலிய தேசிய ரீதியான பிரச்சினைகளையும் சீரற்ற இடமாற்றம், ஆசிரியர்களின்– அதிபர்களின் போக்குவரத்துச் சீர் இன்மை, அரசியல் தலையீடுகள், அதிகாரிகளின் அடாவடித்தனம், உள்ளகப் பழிவாங்கல் முதலிய வடக்கு மாகாணப் பிரச்சினைகளையும் வலியுறுத்தி போராட்டங்களை நடத்தியிருந்தோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள் உரிமைகளுக்கு நாம் முன்னர் பல போராட்டங்களை நடத்தியபோதும் அவற்றையெல்லாம் அரசு காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

அரசின் அடாவடித்தனங்களுக்கு எதிராகவும் அதிபர் ஆசிரியர்களின் ஆறம்சக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுமாறும் கோரி இம்முறை உரிய தரப்பினருக்கு எதிராக இன்றும் நாளையும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தலைமைத்துவத்தின் கீழ், ஆசிரியர் விடுதலை முன்னணி, இலங்கை ஆசிரியர் சங்கம், ஶ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கம், வடமாகாண அதிபர்கள் சங்கம், கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம், அதிபர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் ஆலோசகர்களின் சங்கம், சுயாதின இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை அரசு ஆசிரியர் சங்கம், தேசிய அதிபர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், பொது ஆசிரியர் சேவையாளர் சங்கம், பயிற்சி கல்வியற் கல்லூரி மற்றும் பட்டதாரி ஆசிரியர் சங்கம், கிறிஸ்த்தவ ஆசிரியர் சங்கம், அதிபர் சேவையாளர் சங்கம், பிரிவேனா ஆசிரியர் சங்கம் முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட சங்கங்களின் பங்களிப்புடன் நாடு தழுவிய ரீதியில் சுகவீன போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு அனைவரதும் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இலாப நோக்குடனும் இனவாதத்துடனும் அரசியல்வாதிகளுக்குத் துணைபோகும் குறிப்பிட்ட ஒரு சில விசமிகள் தனிப்பட்ட சில தேவைகளுக்காக எமது போராட்டத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினராகிய நாம் எமது வடக்கு மாகாண ஆசிரியர்களிடமும் அதிபர்களிடமும் வேண்டி கொள்வது, ஒரு சில விசமிகளின் பொய்யான கருத்துக்களைக் கருத்தில் கொள்ளாது உங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமும் விலை போகாத தலைமைத்துவமும் கிடைத்துள்ளன.

எனவே நடைபெறவுள்ள சுகவீனவிடுமுறையைப்பதிவுசெய்து, உங்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் மாணவர்களுக்குச் சுதந்திரமாக கல்வி கற்பித்து அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தைக் கல்வியால் முன்னேற்றவும் உங்களது சுகவீன விடுமுறையைப் பயன்படுத்துமாறு வினயமாக கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

## ஆலய வளவில் தேரரின் சடலம் எரிப்பு; மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு



முல்லைத்தீவு – பழைய செம் மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயவளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிள்ளையார் ஆலய நிர்வாகிகளும் தமிழர் மரபுரிமைப் பேரவை யினரும் இணைந்து நேற்று முற்பகல் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு – பழைய செம் மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணியில் நீதி மன்றக் கட்டளையை மீறிப் பௌத்த தேரரின் சடலத்தைத் தகனம் செய்தமை, சட்டத்தரணி சுகாஸ் மற்றும் மக்கள் மீது பொலி ஸார் மேற்கொண்ட அடாவடி தொடர்பாகவே முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

### புலிகளுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல் மறைந்திருந்தார் என்றும், அவரது சகோதரர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்தே நாடு திரும்பினார் என்றும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மத்துகம பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை வரவேற்கும் பேரணி ஆரம்பமாகியது. 'சஜித் வருகின்றார்' எனப் பெயரிடப்பட்ட இந்தப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர் இடம்பெற்றபோது கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறி ஒரு கோழை போல் மறைந்தார். அவரது சகோதரர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே நாடு திரும்பினார்.

சஜித் பிரேமதாஸ நல்ல விடயங்களைச் செய்யக்கூடிய ஒரு தலைவர். வீடமைச்சினால் என்ன செய்ய முடியும் என்பதைக் காட்டினார். அவருக்கு நிதி அமைச்சு அல்லது பெற்றோலிய அமைச்சு வழங்கப்பட்டிருந்தால் அவர் நாட்டை இன்னும் முன்னோக்கிக் கொண்டு சென்றிருப்பார்.

அவருக்கு உதவத் தயாராக இருக்கும் நல்ல தலைவர்கள் குழு சஜித் பிரேமதாஸவைச் சுற்றி உள்ளது. இது எங்கள் பொற்காலம், 2025 ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்கு போட்டியாக இலங்கையில் உட்கட்டமைப்பை உருவாக்க முடியும்.

சஜித் பிரேமதாஸவுக்கு 2015 ஆம் ஆண்டு தேர்தலில் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால் எங்கள் வேட்பாளர் இருந்தபோதிலும், எங்கள் கட்சி ஒரு வேட்பாளரை வாடகைக்கு எடுத்தது.

ஆனால் தற்போது அமைச்சர் சஜித் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து ராஜபக்ஷ குடும்பம் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பித்துள்ளது – என்றார்.

### தியாகி திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள திலீபனின் நினைவிடத்தில் யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. மாநகர முதல்வர் தலைமையில் இந்த நிகழ்வை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, தியாக தீபன் திலீபனின் இறுதி நாள் நடைபயணத்துக்காக அனைத்து தமிழ் உணர்வாளர்களையும் நாவற்குழிச் சந்தியில் இன்று காலை 8 மணிக்கு ஒன்று கூடுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

தியாகதீபம் திலீபனின் கோரிக்கைகள் நினைவேறவும் தமிழ் மக்களின் வேணவாக்கள் வெற்றி பெறவும் அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றினையுமாறு அவர் கேட்டுள்ளார்.

தியாகதீபம் திலீபனின் நினைவு வாரத்தில் வவுனியாவில் ஆரம்பித்து நடத்தப்படும் நடைபயணம் நேற்றுக் காலை எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்து புறப்பட்டு மாலை நாவற்குழியை வந்தடைந்தது.

இன்று காலை இறுதி நாள் அன்று நாவற்குழிப் பகுதியில் இருந்து நடைபயணம் நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி நோக்கி முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இன்று காலை 8 மணியளவில் தமிழ் உறவுகள் அனைவரும் நாவற்குழியில் ஒன்று கூடவேண்டும் என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் கேட்டுள்ளார்.

அங்கிருந்து புறப்படும் நடைபயணம் முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் தியாகதீபம் திலீபன் உயிர்கொடை வழங்கிய இடத்தை வந்தடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ–10)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் பரபரப்பாக வெளியாகிருந்தன.

முதலாவது – *"இந்த நாட்டில் பிக்குகளுக்குத் தனி மரியாதை உண்டு. ஆனால் அவர்களை அவமதித்துத் தமிழ் அரசியல் வாதிகளின் பின்புலத்துடன் செயற்படும் சட்டத்தரணிகளின் நடவடிக்கையால்தான் முல்லைத்தீவு நீராவியடியில் பதற்றம் ஏற்பட்டது."* – இப்படி ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார் என்று வெளியான செய்தி.

இரண்டாவது – *"விகாரதிபதியின் உடலை வைத்து பௌத்த பிக்குகள் சிலர் வடக்கில் அரசியல் நாடகம் நடத்தியுள்ளார்கள். நீதி மன்றத்தின் உத்தரவையும் மீறிய இவர்களின் அடாவடி குறித்து நாம் வெட்கித் தலைகுனிகின்றோம்."* – இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரசிங்க கூறினார் என வெளியான செய்தி.

இந்த இரண்டு செய்திகளுமே அடுத்த நாள் காலையில் தமிழ் அச்சு ஊடகங்களில் – குறிப்பாகக் குடாநாட்டில் இருந்து வெளியாகும் ஊடகங்களில் – மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் தெரிவித்தவை என்று கூறப்பட்ட இந்தச் செய்திகள் சிங்கள, ஆங்கில ஊடகங்களில் அன்று இடம்பெறவில்லை. வடக்குத் தமிழ் ஊடகங்களைப் பார்த்து அவை அதற்கு அடுத்த நாள்களில் பிரசுரித்தனவோ, என்னவோ தெரியவில்லை. ஆனால் அப்படிப் பிரசுரமானமை தொடர்பில் எனக்குத் தகவல் இல்லை.

தமிழ் ஊடகங்களில் வெளியான அந்தச் செய்திகளிலும் கோட்டா தெரிவித்தார், ரணில் கூறினார் என்று உள்ளதே தவிர, எங்கு, எப்போது அப்படி அவர்கள் கூறினார்கள் என்றோ அல்லது அறிக்கையாகவோ, செய்திக் குறிப்பாகவோ அவ்விவரத்தை அவர்கள் வெளியிட்டார்கள் என்றோ ஏதுமில்லை. அநாமேதய செய்திகளாகவே அவை இரண்டும் இருந்தன.

அப்படிக் கருத்தையோ, செய்தியையோ கோட்டாபய ராஜபக்ஷ வெளியிடவேயில்லை என்று அவரது தரப்பில் அடித்து – மிக உறுதியாக – கூறப்படுகின்றது.

பிரதமர் ரணில் தரப்பிலிருந்தும் அத்தகைய செய்தி ஏதும் வெளியானமையை ஊர்ஜிதப் படுத்தவே முடியவில்லை.

அப்படியானால், தமிழ் மக்களின் உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட – உணர்வுபூர்வமான – விடயத்தில் கூட இவ்வாறு கீழ்தரமான முறையில் – அப்பட்டமான பொய்த் தகவல்கள் – இலகுவாக விதைக்கப்படுகின்றன என்றே அர்த்தம்.

இது ஊடகத்துறையில் மிக மிக ஆபத்தான நிலைமை.

தமிழ் ஊடகத்துறையில் எவ்வாறு இவ்வளவு இலகுவாக – இவ்வளவு விரைவாக – ஊடுருவி அப்பட்டமான பொய்ச் செய்திகளை விதைக்க முடிகின்றது?

அல்லது ஊடகங்களின் பொறுப்பாளர்களே தமது அரசியல் நலன், நோக்கங்கள் கருதி தம்பாட்டிலேயே இப்படி கப்ஸா' செய்திகளை நாசூக்காகக் கட்டி விடுகின்றார்களோ தெரியவில்லை.

எது, எப்படியோ, மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் – இப்படி தேசத்தின் மிக, மிக முக்கிய நபர்களின் பெயர்களைப் பயன்படுத்தியே இலகுவாக தமிழ் ஊடகங்களில் கப்ஸா' செய்தி அடித்து விட்டு பம்மிக்'கொண்டு இருக்கலாம் என்பது மிகமிக ஆபத்தான நிலைமை.

இத்தகைய போக்கு ஒரு நாள் பெரும் வீபரீதத்துக்கு வித்திடும். அப்போதுதான் நாம் எழுந்து முழிப்போம். ஆனால், அப்போது – நிலைமை எல்லை மீறிவிட்டிருக்கும் நம் கையை விட்டு...!

★ ★ ★

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு சினேகபூர்வமான சந்திப்பு ஒன்று ஜனாதிபதியின் கொழும்பு உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. இருவரும் மட்டும் தனித்திருந்து சில விடயங்களை மனம் விட்டுப் பேசினர் எனக் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பை அடுத்தே – நிதி மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் கடற்படையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட – மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான – யோசித ராஜபக்ஷவை, அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 2016 பெப்ரவரி 28ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக மீளவும் சேவையில் இணைக்கும் விசேட உத்தரவு நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விடுக்கப்பட்டதாக அறியவருகின்றது.

ஜனாதிபதி பதவிக்குப் பிந்திய தமது காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் முன்னேற்பாடுகளை மைத்திரிபால சிறிசேன கனகச்சிதமாகக் கையாளுகின்றார் என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 16ஆம் திகதி. தேர்தல் முடிவு 17ஆம் திகதி வெளிவரும். அதுவரைத்தான் மைத்திரியின் ஜனாதிபதிப் பதவிக்காலம். அதன்படி பார்த்தால் அவரது அதிகாரம் இன்னும் 52 நாள்கள் மட்டும்தான்...!

★ ★ ★

தமிழ் மக்கள் பிரதமர் ரணில் பக்கம்தான் நிற்கின்றார்கள். ரணில் வேட்பாளராக வராவிட்டால் தமிழ் வாக்குகள் ஐ.தே.கவுக்கு அதிகம் கிடைக்காது" – என்று சில தரப்புகள் சஜித் தரப்பை அச்சுறுத்துகின்றன என்று தகவல்.

ஆனால், அந்த அச்சுறுத்தலைத் துச்சமாக மதிக்கும்படி நிதி அமைச்சர் மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸாவுக்குக் கயிறு கொடுக்கின்றார் என்றும் செய்தி.

நீங்கள் பயப்படாதீர்கள். கூட்டமைப்பின் முக்கிய உயிர்காப்பு வயர்கள்' புலம்பெயர் தேசத்தில் தான் உள்ளன. அந்த வயர்கள்' மூலம் கூட்டமைப்பை ஒழுங்காக உங்கள் பின்னால் அணிவகுக்கச் செய்ய என்னால் முடியும். ஆகவே, தமிழ்க் கூட்டமைப்புக் குறித்து நீங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாதீர்கள்...!" – என்று சஜித்துக்கு உறுதி கொடுத்திருக்கின்றாராம் மங்கள.

மங்கள குறிப்பிடும் அந்த லைவ் –வயர்கள்' யார் என்பது தான் கேள்வி.

உங்களுக்குத் தெரியுமா வாசகர்களே...?

- மின்னல் -

### ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலும் ரயில்வே ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணில் - சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் விதித்த நிபந்தனைகளுக்கு சஜித் பிரேமதாஸ எழுத்து மூலம் உத்தரவாதம் அளித்தே ஆகவேண்டும் என பிரதமர் ரணில் அழுங்குப் பிடியாக உள்ளார். ஆனால் எந்த நிபந்தனைகளுக்கும் தான் அடிபணியமாட்டேன் என சஜித் பிரேமதாஸ நேற்று மாலை உறுதியாக அறிவித்துவிட்டார். இதனால் இருவரிடையே ஏற்பட்ட இணக்கம் பாதிக்கப்பட்டு முறுகல் நிலை தோன்றியுள்ளது.

ஜனாதிபதியாகத் தெரிவானால் 6 மாதங்களுக்குள் நிறைவேற்றி கார ஜனாதிபதி முறை ஒழிப்பு, ரணிலைக் கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் இருக்க அனுமதித்தல், மரண தண்டனை அமுலாக்கத்தை இரத்துச் செய்தல், இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்தல் ஆகிய நிபந்தனைகளை சஜித் பிரேமதாஸ தரப்புக்கு ரணில் முன்வைத்திருந்தார். இது தொடர்பில் எழுத்து மூல உத்தரவாதத்தையும் அவர் கோரியிருந்தார்.

ஆயினும் ஐ.தே.க. தலைவர் ரணிலின் நிபந்தனைகளை ஏற்கத்தான் ஒருபோதும் தயாரில்லை என சஜித் பிரேமதாஸ நேற்று மாலை பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

நேற்று மாலை மத்துகமையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ –

நிபந்தனைகள் அடிப்படையிலேயே எனக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கப்படவுள்ளது என இன்று(நேற்று) காலை ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. நான் எவரிடமும் கைப்பாவையல்ல. அதேபோல் பதவிகளுக்காக நிபந்தனைகளை ஏற்று அரசியல் நடத்தியதும் இல்லை.

மனசாட்சியின் பிரகாரம் மக்களுக்கான அரசியலையே முன்னெடுத்து வருகின்றேன். பதவிகளைவிட சுயகௌரவமும், நாடுமே எனக்கு முக்கியம் என்பதால் ஒருபோதும் நிபந்தனைகளுக்கு அடிபணியமாட்டேன் என்பதைத் தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

பல சவால்களை எதிர்கொண்டு முட்கள் நிறைந்த பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றேன். இறுதி நேரத்தில் துரோகம் இழைக்கப் பட்டால்கூட எனது பயணம் தடைப்படாது. செல்ல வேண்டிய இடத்துக்கு நிச்சயம் செல்வேன். மக்கள் வழங்கும் ஆணையை உயிரிலும் மேலான தாகக் கருதி செயற்படுவேன்.

அதேவேளை, தற்போதைய அரசமைப்பில் உள்ளவாறு பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனைத்து விகாரைகளும் அபிவிருத்தி செய்யப்படும். அதேபோல் ஏனைய மதங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

அவரது இந்தப் பேச்சை அடுத்து சஜித் – ரணில் இடையேயான முறுகல் நிலை உச்சமடைந்துள்ளது எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறின. (ஐ)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ல் ஈடுபட்டனர்.

கடந்த திங்கள்கிழமை முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அவமதித்தமை மற்றும் சட்டத்தரணிகள் மீது தாக்குதல் மேற்கொண்டமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் வடக்கு – கிழக்கில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அத்தோடு நாளை வெள்ளிக்கிழமை வரை தொடர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர். இதன் தொடர்ச்சியாக நேற்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் முன் பாகக் கறுப்புத் துணியால் வாயைக் கட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## சஜித் விடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வால் விடுக்கப்பட்ட அழைப்பை அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஏற்றுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகத் தன்னுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேறிய உறுப்பினர்களுக்கு சஜித் பிரேமதாஸ நேற்று முன் தினம் அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் திஸ்ஸ அத்தநாயக்கவால், சஜித் பிரேமதாஸவுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

பல்வேறு காரணங்களால், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்கும் உறுப்பினர்களை மீண்டும் கட்சியுடன் இணையுமாறு நீங்கள் (சஜித்) விடுத்துள்ள அழைப்பு வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்தக் கோரிக்கையில் எனது பெயரையும் விளித்திருந்தீர்கள். அது குறித்து ஆழமாகச் சிந்தித்தேன். உங்கள் அழைப்பை ஏற்று இணைந்து செயற்படும் முடிவை எடுத்துள்ளேன்.

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை இருந்தும், அந்த வாய்ப்பை நழுவவிட்டதாலேயே கட்சியிலிருந்து விலகிச் செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி வெற்றி பெற வைக்கும் எனது நோக்கம் நிறைவேறும் வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளதால் உங்களுடன் கரம் கோர்த்து செயற்படத்தயார். எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பங்காளிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம்பெற்றது.

நிதி அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ செய்யவேண்டிய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் குறித்து ஆராயப்பட்டது.

முக்கியமாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் தொடர்ந்தும் கட்சியின் தலைவராகவும் இருப்பார், அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து ஆறு மாத காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்ற பிரதான கோரிக்கைகளை ஏற்றுகொள்ளவேண்டும் என்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

இவை இரண்டையும் அடிப்படையாக வைத்தும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான பரந்த கூட்டணியை அமைப்பது, கட்சியின் தலைமைத்துவத்தைப் பிரதானப்படுத்திய அரச நகர்வுகளைக் கொண்டு செல்வது மற்றும் புதிதாக முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள், தேர்தலில் வாக்குகளை தக்கவைக்க முன்னெடுக்கும் நகர்வுகள் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஐ)

## பிக்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸாரும் துணை நின்றுள்ளார்கள். இது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, இத்தகைய சம்பவங்கள் இனியும் நடக்காதிருக்க இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்படவேண்டும் எனவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அத்துமீறி இடம்பெற்று வரும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து செயற்பட்டமை பாராட்டத்தக்கது. அத்தகையவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளமை கண்டிக்கத்தக்கது. குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த குரு தமக்குரியது என்று கூறி விகாரை அமைத்தமை தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்குகள் இடம்பெற்று வருகின்றது. பௌத்த மதகுருவின் உடலை எரிப்பதற்கு நீதிமன்றக் கட்டளை பிறப்பித்துள்ள நிலையில் அதனை மீறிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் மத குருவின் உடலை எரித்தது மட்டுமன்றி, நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்த சட்டத்தரணிகள் பொலிஸாரிடம் கோரிய நிலையில் பொலிஸார் முன்னிலையிலேயே சட்டத்தரணியும் இளைஞர்களும் தாக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சம்பவமானது இன மத நல்லிணக்கத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். இது கண்டிக்கத்தக்கது. இதற்கு எதிராக நாங்கள் ஒன்றுகூடி அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பில் கலந்துரையாடி அர்த்தமுள்ள முடிவுகள் எடுக்கவேண்டும்.

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் ஏற்கனவே சிறைவாசம் அனுபவித்த ஞானசார தேரர் தன் குழுவுடன் இணைந்து இந்தக் குற்றச்செயலை மீண்டும் செய்துள்ளார். சிறைவாசம் அனுபவித்த தேரரை ஜனாதிபதி பொதுமன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். இந்த நிலையில் மீளவும் நீதிமன்ற அவமதிப்பு இடம்பெற்றுள்ளது. இதற்கு ஜனாதிபதி என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்பதை நாங்கள் மட்டுமன்றி அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

இந்துக் கோவில்களை ஆக்கிரமித்து புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் கட்டுவது தொடர்கின்றது. இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் பௌத்த குருமார் அத்துமீறிச் செயற்படுவதை நிறுத்தவும் ஜனாதிபதியிடம் வற்புறுத்துகின்றோம் – என்றார். (ஐ-07)

## ஸ்காபரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அவரது நண்பர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கள் இரவு 8.20 அளவில் ஸ்காபரோ பகுதியில் வீதியை கடக்க முற்பட்டபோது இந்த இளைஞன் விபத்துக்குள்ளானார் என விசாரணைகளின் போது தெரியவந்தது.

உயிரிழந்த இளைஞன் 17 வயது மதிக்கத்தக்க சாமுவேல் டேன் குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். விபத்தில் படுகாயமடைந்த அந்த இளைஞன் மீட்கப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என மருத்துவமனைத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ரணிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் வெட்கித் தலைகுனிவதாகக் கூறியுள்ளார். அவரைப் பிரதமராகக் கொண்டு வந்தமைக்கு நாமே வெட்கித் தலைகுனிய வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த பிக்குவின் உடலம் எரிக்கப்பட்டமைக்குப் பொதுபலசேனாவின் தலைவர் ஞானசார தேரர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இந்தச் சம்பவத்தில் என்னைப் பொறுத்தவரை பிக்குமார் விட்ட தவறிலும் பார்க்கப் பொலிஸார் சரியாக நடக்காது தவறு இழைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே பிக்குவின் உடலைத் தகனம் செய்யவேண்டாம் என நீதிமன்றக் கட்டளை இருந்துள்ளது. அத்துடன் இது தொடர்பில் நீதிமன்றில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தமையைத் தெரிந்துகொண்டு பிக்குவின் உடலை தகனம் செய்யப் பொலிஸார் அனுமதித்தமை மிகவும் பிழையான செயற்பாடே. இந்த விடயத்தில் சட்டத்திலும் பார்க்க அரசியல் ரீதியான பிழையே இடம்பெற்றுள்ளது. பொலிஸாரை கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த அரசிடமே உள்ளது. சட்டரீதியான விடயத்தில் எல்லாமே சரியாக நடந்துள்ளது. ஆனால் அரசியல் தவறு நடந்துள்ளது. பொது பலசேனாவின் தலைவர் இந்த இடைவெளியைப் பாவித்தே பிக்குவின் சடலத்தைத் தகனம் செய்துள்ளார்.

நீதிமன்றில் வழங்கப்பட்ட கட்டளை பிக்குமார்களின் கைகளுக்கு கிடைக்க முன்னரே அவர்கள் உடலைத் தகனம் செய்துள்ளனர். சம்பவ இடத்தில் நின்ற சட்டத்தரணி சுகாஸ் நீதிமன்றக் கட்டளையை அங்கு நின்ற பொலிஸாருக்கும் பிக்குமாருக்கும் காண்பித்துள்ளார். அவரின் செயற்பாடு, உணர்வு தார்மீக ரீதியாகச் சரியாக இருந்தாலும் சட்ட ரீதியாக அது ஏற்புடையது அல்ல. நீதிமன்றக் கட்டளையை வழங்க வேண்டியவர் அந்த நீதிமன்றத்தின் பதிவாளரே. சம்பவத்தில் ஒட்டுமொத்த தவறையும் பொலிஸார் விட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் நடைபெற்ற சம்பவத்தைப் பார்த்து தாம் வெட்கித் தலை குனிவதாகப் பிரதமர் ரணில் கூறியுள்ளார். நாட்டின் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய பிரதமர் இவ்வாறு கூறலாமா? அவர் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அது அவரின் கடமை. உண்மையில் அப்பகுதியின் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பிரச்சினையை எவ்வாறு கையாள வேண்டும் என உத்தரவிட்டிருக்க வேண்டும். தனது உத்தரவைப் பொலிஸார் நடைமுறைப்படுத்தாது விடடால் அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதுதான் நாட்டின் பிரதமருக்கு உள்ள கடமை. இதனைச் செய்யாமல் விட்டுவிட்டு வெட்கித் தலைகுனிகின்றேன் என ஊடகங்களுக்குக் கூறுவது சரியல்ல. உங்களைப் பிரதமராக கொண்டு வந்ததற்கு நாமே வெட்கித் தலை குனிய வேண்டும் – என்றார். (ஐ-7)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

உப்புவெளி பொலிஸ் பிரிவின் அபயபுர அபயாராம விகாரையில் உள்ள புத்தர் சிலைகளே இவ்வாறு நேற்று உடைக்கப்பட்டுள்ளன.

ஒரு சிலை உடைக்கப்பட்ட நிலையில் மற்றுமொரு சிலை கண்ணாடிப் பெட்டியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் தானம் ஒன்றுக்காக வெளியே சென்ற சந்தர்ப்பத்தில் உடைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதனை ஒருவர் தொலைபேசி மூலம் தெரிவித்தார் என்றும் விகாராதிபதி மானின்கமுவே விமலஜோதி திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உடனடியாக 119 என்ற பொலிஸாரின் அவசர இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு அறிவித்தார் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

இதற்கமைய உடனடியாக செயற்பட்ட உப்புவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நீராவியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவிலின் முன்புறத்திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட பௌத்த சிங்கள அதிகார சதிராட்டத்தில் ஈடுபட்ட பௌத்த பிக்குகளும் அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயற்பட்ட கனவான்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையாக இன்று உள்ளது.

இந்த விவகாரத்தில் நீதி நிலை நாட்டப்படுவதற்கு ஏதுவாக, சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் வடக்கு மாகாணச் சட்டத்தரணிகள் களமிறங்கியுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை வரை சட்டத்தரணிகளின் நீதிமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலம் கடத்தாமல் சட்டத்தை நிலைநாட்டி பிரச்சினையைச் சுமுகமாக தீர்த்து வைக்க அரசு தவறுமேயானால் அடுத்தது என்ன என்ற கேள்வி உடனடியாகவே எழத்தான் செய்யும்.

இந்த விவகாரம் கால இழுத்தடிப்பினால் நீர்த்துப்போக எவ்விதத்திலும் அனுமதிக்கக் கூடாது.

தேவைப்படும் நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறினால் பரந்த அளவிலான மக்கள் போராட்டம் ஒன்றுக்கான அறைகூவலை விடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

குறுகிய கட்சி அரசியல் நலன்களையும் வேறுபாடுகளையும் புறந்தள்ளி தமிழ்த் தேசியம் சார்ந்த சகல அரசியல் கட்சிகளையும் இந்த செயற்திட்டத்தில் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக அதனை முன்னெடுக்க முடியும் என்றே நம்புகின்றோம்.

பண்டாரவன்னியன் ஆண்ட மண்ணில் வைத்து சண்டாளச் சேனை ஒன்றினால் தமிழினத்தின் சுய மரியாதைக்கு விடுக்கப்பட்டிருக்கும் இனவெறிச் சவாலை சாத்தியமான சகல வழிகளிலும் நாம் அனைவரும் சந்தித்தே ஆக வேண்டும் – என்றுள்ளது. (ஐ-07)

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## திலீபனுக்காய்க் காத்திருப்பு

தமிழர் தேசத்தின் ஆன்மாவைத் தொட்டு நின்ற ஒரு புனிதனின் நினைவுதினம் இன்று.

காந்தி தேசத்துக்கே காந்தீயத்தைப் போதித்த ஒரு மறவனின் அளப்பரிய தியாகத்தை – ஒப்பற்ற ஈகத்தை – நாம் நினைவில் கொள்ளும் ஓர் உயரிய தினம் இது.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் போராளிகளின் ஒப்புயர்வற்ற தற்கொடைகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வது. அதில் சிகரத்தைத் தொட்டு விஞ்சி நிற்பவன் தியாகி திலீபன்.

உலகத்தை ஒரு புறம் வியப்பிலும், மறுபுறம் அதிர்ச்சியிலும், சோகத்திலும் ஆழ்த்திய ஒரு விடுதலை மறவனின் வீரச் சுவடுகளை வரலாற்றில் பதித்த நாள் இது.

முப்பது வருட அஹிம்சைப் பேராட்டத்தையும், முப்பது வருட ஆயுதப் போராட்டத்தையும் தனது வரலாறாகக் கொண்ட நமது விடுதலைப் பயணம் கடந்த பத்தாண்டுகளாக ஓர் இக்கட்டில் வந்து முடங்கி நிற்கின்றது.

அந்த விடுதலைப் போராட்ட வண்டியை சாதனை என்ற திசையை நோக்கி நகர்த்தக் கூடிய ஒரே மார்க்கம் தியாகி திலீபன் நமக்குக் காட்டிய அஹிம்சைப் பாதைதான்.

ஆயுதப் போராட்டத்தில் தோற்று, ஆற்றாமையால் துவண்டு, ஏது செய்வது என்று தெரியாமல் தளர்ந்து போயிருக்கும் ஈழத் தமிழினத்துக்கு இன்று தேவைப் படுவது திலீபனைப் போன்ற உண்மையான அஹிம்சை மறவீரர்கள்தாம்.

முடங்கிக் கிடக்கும் விடுதலைப் போராட்டத்தை முண்டு கொடுத்துத் தள்ளி, முன் நகர்த்தி விடும் மாயசக்தி அந்த வீரமறவன் காட்டிய வித்தைக்குள்தான் முடங்கிக் கிடக்கின்றது. யார் அந்த வித்தையைக் துணிவாகக் கையாண்டு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்துவர் என்பதே கேள்வி.

தான் பற்றிய கொள்கைக்காக, இம்மியும் பிசகாது, ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், பல்லாயிரக் கணக்கான தம்மினத்தவரும் தன் போராளித் தோழர்களும் சூழ்ந்திருந்து பார்த்து, வேதனையில் வெம்பிக் கதறியழ, அணு, அணுவாய் உடல் தளர்ந்து, சாவை அரவணைத்து, தன் தேச மக்களுக்காய்த் தன்னை அர்ப்பணித்த ஒரு பெரும் தியாகி நம் திலீபன்.

'புரந்தார்கண் நீர்மல்க சாகிற்பின் சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து' – என்றான் திருக்குறள் தந்த நம் செந்நாப்போதகன் திருவள்ளுவன்.

"தம்மை காத்த தலைவனுடைய கண்ணீர் பெருகுமாறு சாகப் பெற்றால், அச்சாவு இரந்தாவது பெற்றுக் கொள்ளத்தக்க பெருமை – மாண்பு – உடையது" – என்பது இரண்டடியில் மறைதந்த வள்ளுவனின் கூற்று.

தலைவன் மட்டுமல்ல, தமிழினமே சூழநின்று, அழுது ஆற்ற – பன்னிரண்டு நாள்கள் எந்த அன்ன ஆகாரமுமோ, ஒரு சொட்டு நீரோ அருந்தாமல், அணு அணுவாய் அந்த வேள்வித் தீயில் வெதும்பி, உருகி, உடல் தளர்ந்து, உயிர் துறந்து, ஈழக் கனவுடன் நம் நினைவில் நனவானான் நம் திலீபன்.

ஈகத் தியாகத்தின் உச்சமாகக் கட்டவிழ்ந்த – ஒரு சரித்திரத் திருப்ப நிகழ்வாகக் கொள்ளத் தக்கது முப்பதியொரு ஆண்டுகளுக்கு முன்னர் திலீபன் முன்னெடுத்த அந்த யுகப் போராட்டம்.

அத்தகைய ஒரு வரலாற்றுத் திருப்பம்தான் இப்போதும் – இந்த இக்கட்டில் சிக்கி நிக்கும் தமிழினத்துக்கு – அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றது.

தந்தை செல்வா காட்டிய அறவழிப் பாதையை, உத்தம காந்தி மகான் நெறித்த அஹிம்சை வழித்தடத்தை அதிகாரப் பதவிகளையும், குறுகிய அரசியல் லாபங்களையும் எட்டுவதற்காக நடிப்பு சுதேசிகளாக முன்னெடுக்கும் நம் அரசியல் தலைவர்கள் மத்தியில் இன்று, உண்மையான – உறுதியான – தளராத – அஹிம்சை மார்க்கத்தில் போராடக் கூடிய திலீபன்களே தேவைப்படுகின்றார்கள்.

அறவழிப் போராட்டத்தின் மென்மைப் போக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதில் குளிர்காயும் சுயநலக் கும்பல்களின் கைகளில்தான் எமது போராட்டத் தலைமை வீழ்ந்து கிடக்கின்றது என்பதே இன்றைய யதார்த்தச் சோகமாகும்.

'போராட்டம் வெடிக்கும்!', 'போராட்டம் வெடிக்கும்!' – என்று புசத்தும் இந்தக் காலாவதி அரசியல் தலைவர்களிடமிருந்து நம்மை மீட்டு, அறவழியில் உறுதியாக நின்று போராடி, தென்னிலங்கைப் பேரினவாதிகளின் ஆழ் மனத்தையே ஓர் அசைப்பு அசைத்து, வழிப்படுத்தி, நம் பக்கம் திருப்புவதற்கு இன்று ஓர் அறவழித் திலீபன் தேவைப்படுகின்றான்.

அவனது ஒவ்வொரு நினைவேந்தலின் போதும் நாம் வேண்டி நிற்பது இதனைத்தான்.

கொள்கைப் பற்றும், விலை போகாப் பேராண்மையும், நெஞ்சுறுதியும், இனத்துக்காகத் தன்னுயிரை ஈந்தளிக்கும் தாராளமும் கொண்ட ஒரு தற்கொடை வீரன் திலீபனுக்காக நம் தமிழினம் ஏங்கிக் காத்துக் கிடக்கின்றது.

# தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியை உருவாக்கவேண்டும்

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிந்துரை



கொழும்பு, செப். 26

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தமது விசாரணை அறிக்கையை இறுதி செய்வதற்கான கூட்டத்தை நேற்று முன் தினம் நடத்தியது. இதில் ஐந்து பிரதான விடயங்கள் குறித்து பரிந்துரைகளை முன்வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பெயரில் நிர்வாகப் பிரிவில், ஒரு புதிய பதவி நிலையை உருவாக்கவேண்டும் என்றும் அது பரிந்துரைத்துள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் 2.15 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டனர்.

இதில் ராஜித சேனாரத்ன ஆசு மார சிங்க, ரவூப் ஹக்கீம் ஆகியோர் தவிர ஏனைய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறைகளில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும், இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும் பௌத்த அடிப்படை வாதத்தின் எழுச்சியை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும், பரிந்துரைகளை முன்வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சீர்திருத்தம் உள்ளிட்ட சட்ட தாமதங்களை நிவர்த்தி செய்ய அழைப்பு விடுக்கும் வகையில், பரிந்துரைகளை முன்வைக்கவும், தெரிவுக்குழு உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

வஹாபியிசம் மற்றும் அரபுமயமாக்கப் போக்குகளையும், அதனைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெரிவுக்குழு பரிந்துரை செய்ய முடிவு செய்துள்ளது,

இடைவெளிகள், பலவீனங்கள் மற்றும் சீர்திருத்தம் தேவைப்படும் பகுதிகளை அடையாளம் கண்டு, மேலும் பலப்படுத்துவதற்கு, தேசிய பாதுகாப்பு முன்னுரிமைகள் குறித்து விரிவான மறுஆய்வை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்யவும் தெரிவுக்குழு இணங்கியுள்ளது.

பணிகள், பொறுப்புகள் மற்றும் சாத்தியமான மேலெழுதல்களை கருத்தில் கொண்டு பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையின் தற்போதைய கட்டமைப்புகளை உடனடியாக மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் கோரப்படவுள்ளது.

புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், அவற்றை வலுவாக மற்றும் சுயாதீனமானதாக மாற்றுவதன் அவசியத்தையும் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையில் முக்கியமாகச் சுட்டிக்காட்டுவது எனத் தெரிவுக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

தெரிவுக்குழு முன்பாக வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், தேசிய பாதுகாப்புச் சபையின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் முக்கிய சீர்திருத்தங்களின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றன என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

அந்தச் சீர்திருத்தங்கள், பாதுகாப்பு மற்றும் புல னாய்வுத்துறை நடவடிக்கைகளை வலுப்படுத்தவேண்டும். எதிர்கால பாது காப்பு அச்சுறுத்தல்களைச் சமாளிக்கவேண்டும். அதனைக் கையாளுவதற்கு, அனுபவமிக்க பணியாளர்களைக் கொண்ட ஒரு செயலகத்துடன், தேசிய பாதுகாப்புச் சபைக்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும். தேசிய பாதுகாப்புச் சபையின் ஆணையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

சீர்திருத்தம் செய்யப்பட்ட தேசிய பாதுகாப்புச் சபை, புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்த நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கவேண்டும். முக்கிய முன்னேற்றங்கள் மற்றும் எடுக்கப்பட ண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் உள்கட்டமைப்பு அடிப்படையில், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.– என்பனவாகும்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பெயரில் நிர்வாகப் பிரிவில், ஒரு புதிய பதவி நிலையை உருவாக்கவும், தெரிவுக்குழு அறிக்கை பரிந்துரைக்கும் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு நபராகத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இருக்கவேண்டும். அவர், தேசிய பாதுகாப்புச் சபை செயலகத்தின் பணிகளை மேற்பார்வையிடுவார்.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு இணையாகப் பாதுகாப்பு விவகாரங்களை கையாள்வார்.

பாதுகாப்புச் சபைக் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதும், பாதுகாப்பு அமைச்சரின் பின் தொடர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆணையும் அவருக்கு அளிக்கப்படவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதியைத் தவிர வேறொரு நபராக இருந்தால், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அறிக்கை அளித்தால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்றும் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் விடுமுறை

கொழும்பு, செப். 26

கடும் மழையுடனான வானிலை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்றும் நாளையும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண ஆளுநர் ஹேமால் குணசேகர இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டதை அடுத்து, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்றும் நேற்று முன்தினமும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

**நாளை** 07.09.2019 சனிக்கிழமை

நட்சத்திரம்: கேட்டை மு.ப. 10.48 வரை
திதி : நவமி பி.இ. 2.13 வரை
இராகுகாலம் : 9.04 – 10.34
சுப நேரம் : 3.04 – 4.34

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 26

உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

பூதர்மடம், கோப்பாய், இருபாலை, வசந்தபுரம், கட்டைப்பிராய், இலங்கநாயகி, ஆடியபாதம் வீதி, நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஒரு பகுதி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, முகாமைத்துவபீடம், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி , செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, புமகள் வீதி,சாஸத்ரியார வீதி, நடுத்தெரு லேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி , சுப்பிரமணியம் வீதி , முதலியார் வீதி , பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி , குகன் வதீ , பொன்னம்பலம் வீதி , நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதிபுகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பும்புகார், அரியாலை கிழக்கு, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மரர் கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

பூமலர்ந்தான், கட்டையடம்பன், தம்பனைக் குளம், பண்ணைவெட்டுவான், இசைமலைத்தாழ்வு, நீராவிபுரம், கற்கிடந்தகுளம், செட்டியர் கட்டையடம்பன், கண்ணாட்டி கணேசபுரம், பறயனாலங்குளம், பெரியகட்டு, பிரமணாலங்குளம், குருக்களூர் 01, மனிக்பார்ம், ஆண்டியப்பளியங்குளம், கிறிஸ்தவ குளம், முகத்தாங்குளம், பீடியபாம், தேக்கம் நானாட்டான் பிரதேசசபை, பொயகுஞ்சுக்குளம், பெரியமுறிப்பு ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வேட்பாளராக வெல்கமவை சு.க. ஒருபோதுமே நிறுத்தாது

## அடித்துக் கூறுகின்றார் தயாசிறி

**கொழும்பு, செப். 26**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக இருந்தால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மாத்திரம்தான் நிறுத்துவோம். குமார வெல்கமவை நிறுத்தும் எந்தத் திட்டமும் கிடையாது என்று சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன மட்டுமன்றி சு.கவுடன் இணைந்து போட்டியிட பல மாற்று சக்திகள் உள்ளன எனக் கூறிய அவர், பொது ஜன பெரமுனவினர் தம்மைப் பற்றி அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றனர் எனவும் தெரி வித்தார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

குமார வெல்கம சு.கவில் இருந்து பொதுஜன பெரமுன வுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவின் காலில் விழுந்திருந்தார். அந்த நிலையிலே அவர்



கோட்டாபயவையும் விமர்சித்து வந்தார். தற்போது சு.கவிடம் அவர் சேர்ந்துள்ளார்.அவரை சு.க வேட் பாளராக நிறுத்த எந்த திட்டமும் கிடையாது. மத்திய குழுவும் செயற்குழுவுமே இது தொடர்பில் முடிவு செய்யும்.சு.க சார்பில் ஒருவரை நிறுத்துவதாக இருந் தால் ஜனாதிபதியே போட்டியிடுவார்.

பொதுஜன பெரமுனவுடன் பேசி வருகிறோம்.அவர்கள் தம்மைப் பற்றி அதீத நம்பிக்கையில் உள்ளனர். எமக்கு எந்த நிபந்தனையும் இன்றி அவர்களு டன் இணைய முடியாது. சின்னம் தொடர்பில் தான் நிபந்தனை விதித்துள்ளோம்.

வேறு பதவிகள் எதுவும் கோரவில்லை.எவ்வித நிபந்தனையும் இன்றி அவர் களுடன் இணைந்தால் கட்சி கரைந்துவிடும். அமைச்சுப் பதவிகளுக்கும் எம்.பியாக மீண்டும் தெரிவாவதற்கும் மாத்திரம் அவர்களுடன் இணைய முடியாது.கட்சியைப் பாதுகாத்து, கட்சி யின் தனித்துவத்தைப் பேணியே முடிவு எடுக்கவேண்டும்.

நாம் ஜே.வி.பியுடனும் பேசத் தயாராக இருக்கிறோம். அவர்கள் கூட்டணியாகப் போட்டியிடுகின்றனர். முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கவும் போட்டியிட இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் சகல கூட்டணிகளும் எமக்கு முக்கியமாகும்.பொது ஜன பெரமுன மட்டுமன்றி எமக்கு பலமாற்று வழிகள் இருக்கின்றன – என்றார்.

# படையினர்தான் எனக்கு கடவுள்!

## உண்மையைக் கூறினார் சஜித்

கொழும்பு, செப். 26

இராணுவத்தினரைத் தான் கடவுளைப் போல் பார்க்கிறார் எனவும் அவர்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகள் கட்டாயம் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி இராணுவ வீரர்களின் நன்மைக்காகப் பயனுள்ள யோசனை ஒன்றை நேற்று முன் தினம் அமைச்சரவையில் முன்வைத்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவ வீரர்கள் குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா? என ஊடகவியலாளர்கள் வினவியதற்கு பதிலளிக்கும்போதே இதனைக் கூறிய அமைச்சர் சஜித், மழை காரணமாகத்தான் தாமதித்தே அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றார் எனவும் கூறி



னார்.

அதுவரை பல்வேறு விடயங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரவை பத்திரங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாகவும் அதனால் அவை தொடர்பில் தனக்குப் போதிய தெளிவில்லை எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# நாடாளுமன்றுக்குள்ளேயும் வெள்ளம் நுழையும் ஆபத்து

கொழும்பு, செப். 26

அடை மழையால் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்துக்குள் வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்தமையால் நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்ன ஓயாவின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

கடும் மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ள நிலையில், நாடாளுமன்றத்துக்குள் வெள்ளம் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தியவன்ன ஓயாவின் நீர்மட்டத்தைக் கடற்படை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது. நாடாளுமன்ற நுழைவாயில் மற்றும் சுற்றுப்புறங்களில் கடற்படையினர் மணல் மூடைகளை அடுக்கியுள்ளனர்.

தியவன்ன ஓயாவில் வெள்ளம் ஏற்பட்டு நீர்மட்டம் அதிகரித்ததால், நாடாளுமன்றத்துக்குள் 1992ஆம் ஆண்டும், 2010ஆம் ஆண்டும் வெள்ளம் நுழைந்து சேதங்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# தூய்மை இந்தியா திட்டத்தை முன்னெடுப்பதற்காக பிரதமர் மோடிக்கு 'குளோபல் கோல்கீப்பர்' விருது!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தூய்மை இந்தியா திட்டத்திற்காக பிரதமர் மோடிக்கு, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனம் சார்பில் 'குளோபல் கோல்கீப்பர்' விருது வழங்கப்பட்டது.

பிரதமர் மோடி அரசு முறைப் பயணமாக அமெரிக்காவில் 7 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவில் சென்றிறங்கிய பிரதமர் மோடியை இந்திய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர். அங்கு அவருக்கு சீக்கிய, போரா, காஷ்மீரி பண்டிட் சமூகத்தினர் உற்சாகவரவேற்பு அளித்தனர். அவர்கள் பிரதமர் மோடியிடம் தங்களது கோரிக்கைகளை வைத்தனர். பிரதமருடன் புகைப்படமும் எடுத்து கொண்டனர்.

இதன்பின்பு பிரதமர் மோடி, டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹூஸ்டன் நகரில் ஹவுடி மோடி என்ற நிகழ்ச்சியில் பங்



கேற்றார். அமெரிக்க அதிபர் டிரம்பும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

இதனை தொடர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின் இடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்பின், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தூய்மை இந்தியா திட்டத்திற்காக பிரதமர் மோடிக்கு, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனம் சார்பில் 'குளோபல் கோல்கீப்பர்' விருது வழங்கப்பட்டது.

இந்த விருது பெற்றுக் கொண்ட பின் பிரதமர் மோடி பேசும்போது, எனக்கு வழங்கப்பட்ட இந்த கௌரவம் என்னுடையது இல்லை. தங்களது அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாகத் தூய்மை இந்தியா கனவு திட்டத்தை செயற்படுத்தி வருவதுடன் அதனை நிறைவேற்றிய கோடிக்கணக்கான இந்தியர்களையே அது சாரும் என்று கூறினார்.

கடந்த 5 வருடங்களில் 11 கோடிக்கும் கூடுதலான கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. இந்த நாட்டின் ஏழை மக்கள் மற்றும் பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் அமைந்தது.

இந்தியாவில் கிராமப்புற சுகாதாரம் மேம்பட்டுள்ள நிலையில், குழந்தைகளுக்கு இதயம் சார்ந்த பிரச்சினைகள் குறைந்துள்ளன. பெண்களின் உடல் எடையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று பிரதமர் மோடி கூறினார்.




# ஐ.நாவில் காந்தி சூரியப் பூங்கா பிரதமர் மோடி திறந்து வைத்தார்

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, மகாத்மா காந்தியின் 150 ஆவது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு ஐ.நா.பொதுச் சபை தலைமையகத்தில் காந்தி சூரியப் பூங்காவை நேற்று தினம் திறந்து வைத்தார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் தென் கொரியா அதிபர் மூன் ஜெய்இன் உள்ளிட்ட உலகத்தலைவர்கள் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் காந்தி சூரிய பூங்காவை திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது சுட்டுரைப் பக்கத்தில் பதிவிட்டவை வருமாறு:- மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு புகழஞ்சலி செலுத்த உலகம் ஒன்று சேர்ந்துள்ளது. காந்திய நினைவுகளைப் போற்றும் விதமாக இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி. - எனத் தெரிவித்தார்.

# மது, பீடி, சிகரெட் விற்பனை செய்யாத தமிழகக் கிராமம்!

## அந்த ஊர் நீதிபதி பெருமிதம்

தங்கள் கிராமத்தில் மது, பீடி, சிகரெட் விற்பனை கிடையாது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தமிழக பஞ்சாயத்துகளில் சாரதி பதவி தொடர்பாக ஒரு வழக்கு நீதிபதி டி.ராஜா முன்பு திங்களன்று விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கு ஏற்கனவே, அவர் பிறப்பித்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

இந்த வழக்கு விசாரணையின்போது, குறுக்கிட்ட நீதிபதி டி.ராஜா கூறியதாவது: 'இந்த இடத்தில் என்னுடைய சொந்த கிராமத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். மதுரையில் இருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில், சோழவந்தான் அருகே தேனூர் எங்களது கிராமம். இந்த கிராமத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாக சாராயம், பீடி, சிகரெட் என்று போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது இல்லை. எனக்கு மட்டுமல்ல என் தாத்தாவுக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்த அந்த நல்ல பழக்கம் இன்று வரை எங்கள் கிராமத்தில் தொடர்கிறது. இத்தனைக்கும் அது சின்ன கிராமம் அல்ல. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் உள்ள கிராமம்.

மதுவிலக்கை 100 சதவீதம் முழுமையாக அமுல்படுத்தும் கிராமம். அந்த



கிராமத்தைச் சேர்ந்தவன் என்பதால் தான் எனக்கு எந்த ஒரு கெட்ட பழக்கமும் இல்லை. என்னை போல், அந்த கிராமத்தை சேர்ந்தவர்களிடமும் கெட்ட பழக்கங்கள் எதுவும் இல்லை. இதனால் இந்த கிராமத்தை சேர்ந்த நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்'.- இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து நடந்த விசாரணையில், அரசு தாக்கல் செய்த மறுஆய்வு மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி டி. ராஜா உத்தரவு பிறப்பித்தார்.

# குழந்தைத் திருமணத்தை எதிர்த்து நின்ற சிறுமி பாயலுக்கு அமெரிக்காவில் விருது




குழந்தைத் திருமணத்தை எதிர்த்து நின்று போராடிய ராஜஸ்தான் சிறுமி பாயல் ஜாங்கிட்டுக்கு change maker விருது நியூயோர்க் நகரில் வழங்கப்பட்டது.

இந்த விருதை சிறுமி பாயலுக்கு வழங்கிய நோபல் விருது பெற்ற இந்திய சமூக ஆர்வலர் கைலாஷ்சத்யார்த்தி, குழந்தைகள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக துணிச்சலுடன் போராடும் பாயல் போன்றவர்கள் பெண்ணினத்தையும் இந்தியாவையும் பெருமைப்படுத்துகின்றனர் எனத் தெரிவித்தார்.

தனது திருமணத்தை மறுக்கும் துணிவை பாயல் பெற்றமையை அவர் புகழ்ந்தார். இந்த விருதைப் பெற்றுக் கொண்ட பாயல், பிரதமர் மோடிக்கு சர்வதேச குளோபல் கோல்ஸ் விருது கிடைத்த நேரத்தில் தமக்கு இந்த விருது கிடைத்திருப்பதற்காக மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

பிரதமர் மோடி போன்றவர்கள் உலக அளவில் செயலாற்றி வரும் நிலையில், தான் தனது சிறிய கிராமத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறாா் என பாயல் தெரிவித்தார்.

# கோவையில் தி.மு.க, கூட்டணியின் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை

கோவை,செப்.26

கோவையில் சொத்து வரி உயர்வைக் கண்டித்து தி.மு.க மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற விருந்த முழு அடைப்பு மற்றும் மறியல் போராட்டத்துக்கு தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோவை மாநகராட்சியில், 100 சதவீத சொத்து வரி உயர்வை ரத்து செய்ய வேண்டும், கோவை மாநகராட்சியின் குடிநீர் பராமரிப்பு ஒப்பந்தத்தை பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சூயஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதை தமிழக அரசும், கோவை மாநகராட்சி நிர்வாகமும் ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் நாளை கோவையில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரி தினேஷ்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சத்திய நாராயணன் மற்றும் என்.சேசாயி அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, சொத்து வரி உயர்வை சென்னை உயர் நீதிமன்றமும், மதுரைக் கிளையும் உறுதி செய்துள்ளன எனவும், வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது சட்டவிரோதம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேசமயம், போராட்டத்துக்கு எந்த அனுமதியும் வழங்கப்பட வில்லை எனவும், சட்ட விரோதமாக போராட்டத்தில் ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டிய நீதிபதிகள், கோவையில் அறிவிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தடை விதித்தனர். மேலும், மனு மீது பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை 2 வாரத்திற்கு தள்ளிவைத்தனர்.



## இந்தோனேசியாவின் பப்புவாவில் வன்முறை: அரசு கட்டடங்களுக்குத் தீ: 27 பேர் மரணம்

அணமையில் நடந்த இந்தோனேசியாவின் சுதந்திர தினத்தின் போது, அங்குள்ள அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பெரும் வன்முறை வெடித்தது. பப்புவாவின் நாடாளுமன்றம் உட்பட எண்ணற்ற அரசு கட்டடங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

இந்த நிலையில், பப்புவா பிராந்தியத்துக்கு உட்பட்ட வோமினா நகரில் உள்ள உயர்நிலை பள்ளியில் ஆசிரியர் ஒருவர் இனவாதத்தை தூண்டும் வகையில் பேசினார் என வதந்திகள் பரவி வந்தன. இதைக் கண்டித்து வோமினா நகரிலும், பப்புவா தலைநகர் ஜெயபுராவிலும் மாணவர்களும், பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் பெரும் வன்முறையாக மாறியது. வோமினா நகரில் உள்ள அரசு அலுவலகங்கள், கடைகள் மற்றும் வீடுகளுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். அதே போல் ஜெயபுராவிலும் அரசு கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டன.

இதையடுத்து இரு நகரங்களிலும் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு வன்முறை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் இந்த வன்முறையில் வோமினா நகரில் 23 பேரும், ஜெயபுராவில் ஒரு இராணுவவீரர் உட்பட 4 பேரும் பலியாகினர். படுகாயம் அடைந்த 70 இற்கும் மேற்பட்டோர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அடுப்பங்கரையில் தொங்கவிட்ட ஓவியத்தின் பெறுமதி ரூ.85 கோடி

பாரிஸ்,செப்.26

பிரான்ஸில் பழங்கால ஓவியத்தை அடுப்பங்கறையில் தொங்கவிட்ட மூதாட்டி அதன் மதிப்பு இந்தியப் பணத்தில் 38 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் 85 கோடி ரூபா) என அறிந்து இன்ப அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளார்.



பாரிஸ் அருகே வசித்து வரும் வயதான மூதாட்டியின் வீட்டில் வெகு காலமாக ஒரு ஓவியம் இருந்தது. அதை அடுப்பங்கறையில் மாட்டிவிட்ட அவர், வெகு காலமாக அதன் அடியிலேயே அடுப்பை வைத்து சூடான பண்டங்களை தயாரித்து வந்தார்.

ஒரு நாள் பழங்காலத்து ஓவியமான அதன் மதிப்பு என்னவாக இருக்கும் என அறிய அவ் ஓவியத்தை பழங்காலப் பொருள்கள் விற்கும் உள்ளூர் நபரிடம் எடுத்துச் சென்றார்.

அது மூன்றரை மில்லியன் யூரோக்கள் மதிப்பு கொண்டது என அறிந்ததும் இன்ப அதிர்ச்சியடைந்த மூதாட்டி பின் ஏல நிறுவனம் ஒன்றை அணுகி அது குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் இது 1280 ஆம் ஆண்டு சிமாப்யூ என்பவரால் வரையப்பட்டது என்றும், கிரைஸ்ட் மாக்ட் என்ற தலைப்பில் 8 ஓவியங்களை அவர் வரைந்தார் எனவும் கூறினார்.

அதில் ஏற்கெனவே ஒன்று மூதாதையர்கள் தங்கிய இடத்தை சுத்தம் செய்த போது ஒரு ஓவியருக்குக் கிடைத்தமையை அடுத்து 2000ஆவது ஆண்டில் லண்டன் ஆர்ட் கேலரிக்கு விற்கப்பட்டது.

அவற்றில் ஒன்றாக இந்த அரிய ஓவியம் இருக்கின்றது என ஆய்வில் கண்டறியப்பட்டது. அதன் தற்போதைய மதிப்பு 50 லட்சம் யூரோக்களாககூட இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மதிப்பில் இது 38 கோடியே 97 லட்சத்து 60 ஆயிரத்து 811 ரூபா ஆகும்.

மதிப்பு தெரியாமல் அடுப்படியில் தொங்கவிட்டதை எண்ணிய மூதாட்டி, அடுத்த மாதம் 27 ஆம் திகதி பாரிஸில் ஏலம் விடப்படுவதாக அறிவித்தார்.

## மகப்பேறு மருத்துவமனையில் தீ! அல்ஜீரியாவில் 8 சிசுக்கள் சாவு!!



அல்ஜீரியா நாட்டில், ஒரு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி எட்டுக் குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

அந்த நாட்டின் தலைநகரான அல்ஜீயர்ஸ் நகரில் மகப்பேறு மருத்துவமனை ஒன்று செயற்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் திடீரென தீ பற்றி சற்று நேரத்தில் தீ மளமளவென மற்றத் தளங்களுக்கும் பரவியது.

தகவல் அறிந்து 12 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் வந்த வீரர்கள் போராடித் தீயை அணைத்தனர். ஆனாலும் தீ விபத்தில் 8 பச்சிளம் குழந்தைகள் உடல் கருகியும், மூச்சுத்திணறியும் உயிரிழந்துள்ளன என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.



மேலும் விபத்தில் சிக்கிய 11 குழந்தைகள், 100 இற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் 28 மருத்துவமனை ஊழியர்கள் உட்பட பலரை தீயணைப்பு படையினர் பத்திரமாக மீட்டனர். தீ விபத்து ஏற்பட்டது தொடர்பாக விசாரணை நடத்த அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## பாகிஸ்தான் காஷ்மீரில் நிலநடுக்கம்: 19 பேர் பலி: 300 பேர் வரைக் காயம்

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீரில் பிரதேசத்தின் நியூ மீர்பூர் பகுதி அருகில் நேற்று முன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 5.8 அளவாகப் பதிவாகி உள்ளது. இதனால் நாட்டின் வடபகுதியில் பல்வேறு நகரங்கள் குலுங்கின. சில வீடுகள் இடிந்து விழுந்தன. அந்த பகுதியில் உள்ள மசூதி ஒன்றும் சேதமடைந்தது.



இதனால் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் முழுவதும் மருத்துவமனைகளில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. பல வாகனங்கள் சாலைகளில் ஏற்பட்ட வெடிப்புகளுக்குள் விழுந்தன. சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுத்திய அச்ச உணர்வால் கட்டடத்தில் இருந்து பொதுமக்கள் தப்பி ஓடினர். ஜீலம் கால்வாய் சேதமடைந்து உள்ளது. அதில் இருந்து நீர் பல் வேறு கிராமங்களுக்குள் புகுந் துள்ளது.



இந்நிலநடுக்கத்திற்கு 19 பேர் பலியாகியுள்ளனர். 300 பேர் காயமடைந்து உள்ளனர்.

உயிர்ச் சேதம் மற்றும் பொருள் சேதம் பற்றிய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என தேசிய பேரிடர் மேலாண் கழக தலைவர் முகமது அப்சல் கூறியுள்ளார்

## 26 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியுடைய கொக்கெயின் நீர்மூழ்கி மூலம் கடத்தல்!

### அமெ. கடலோரக் காவல்படை மடக்கியது

அமெரிக்காவில் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் கடத்தப் பட்ட சுமார் 26 ஆயிரம் கோடி ரூபா (இலங்கைப் பணத்தில்) மதிப்பிலான போதைப் பொருள்கள் அதிகாரிகளிடம் சிக்கியுள்ளன.

அமெரிக்காவின் கிழக்கு பசுபிக் கடல் பகுதி வழியாக கொக்கெயின் போதைப் பொருள் கடத்தப்படுகின்றது என அந்நாட்டுக் கடலோரக் காவல் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடல் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது சுமார் 40 அடி ஆழம் வரை மூழ்கிச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் போதைப் பொருள் கடத்தப் படுவது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நீர்மூழ்கிக் கப்பலை விரட்டிச்சென்ற கடலோர படையினர் அதனுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 6 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொக்கெயின் போதைப் பொருளைக் கைப்பற்றினர்.



**இன்று தியாகி திலீபனின் 31ஆவது நினைவு நாள். அதனை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

● பரமபுத்திரன்



# யுத்தம் போதிக்கும் ஆட்சியில் நித்தம் தமிழர்களுக்குத் தொல்லை!

போர், போராட்டம் என்ற சொற்கள் தமிழர்கள் மத்தியில் வெறுப்பான அல்லது விரும்பத்தகாத ஒன்றாக மாறிவிட்டது அல்ல, மாற்றப்பட்டுவிட்டது. இதற்கான காரணத்தை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை. ஈழத்தில் நடந்த விடுதலைப் போராட்டம்தான் எம்மை இந்த வெறுப்புக்கு ஆளாக்கியது என்று எல்லோரும் சுலபமாகச் சொல்லிடுவர். ஆனால் போரும் போராட்டமும் மனித வாழ்கையில் மட்டுமல்ல புவியில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் பொதுவானது.

நாம் விரும்பியோ விரும்பாமலோ வாழ்க்கையுடன் போராடினால்தான் எம்மை நிலைப்படுத்தமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை. உணவு, பாதுகாப்பு, வாழிடம், சந்ததி நிலைப்படுத் துதல் என எல்லாவற்றுக்கும் போராடியே ஆக வேண்டும். இருப்பினும் இவை எல்லாம் நாளாந்த வாழ்கையில் நடந்து முடிவதால் அவை போராட்டம் என்று எமக்கு புரிவதில்லை. அல்லது எமது சுய நலத்துக்காக செய்வதால் சுமையாக எமக்குத் தெரிவதில்லை. அடுத்து புலம் பெயர்ந்தோர் என்ற வகுதிக்குள் வருவதை சிந்திப்போம்.

சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்வதற்கும், புலம்பெயர்ந்த நாட்டில் நம்மை நிலைப்படுத்தவும், அந்நாட்டின் குடிமகன் ஆவதற்கும் எவ்வளவு போராட்டங்களை எதிர்கொள்கின்றோம்? அந்தப் போராட்டங்களை ஏற்றும் கொள்கின்றோம். காரணம் நாங்கள் புதிய வளங்களை பெறுவதாக நினைக்கின்றோம் அல்லது எங்களை ஒரு நிலை யிலிருந்து இன்னொரு நிலைக்கு



உயர்த்துவ தாக மகிழ்கின்றோம். அதனால், அந்தப் போராட் டம் எம்மால் விரும்பப்படுகின்றது.

ஆனால் எங்களது பிறப்புரிமை, வாழ்வுரிமை எல்லாம் எங்கோ தொலைத்து புதிதாக பெற்றுக் கொள்ள இன்னோர் இடத்தில் போராடுகிறோம் என்பதையும், எங்களுக்குச் சொந்தமற்ற நிலத்தில் அல்லது அரசுடன் போராடுகின்றோம் என்பதையும் மறந்து விடுகிறோம். ஆனாலும் நம் மில் சிலர் வெற்றி பெற சிலர் தோல்வியடைவர். தோல்வியுற்றோர் தங்களை நிலைப் படுத்த தொடர்ந்து போராடுவர். அதேவேளை வெற்றி பெற்றோர் அவர்களை மறந்துவிட்டு தங்களை முன்னேற்ற புறப்பட்டு விடுவர்.

அவர்கள் தொடர்பாக யோசிக்கவும் நேரமில்லை, அவசியம் என்ற எண்ணமும் வருவதில்லை. அவர்களது கடினமான நிலையை புரிந்து கொள்ள முயல் வதும் இல்லை. அவர்களுக்கு உதவ நினைப்பதுமில்லை. என் பது உண்மையான செய்தி. சில வேளைகளில் ஒரு நாள் ஒதுக்கி கூட்டமாக கூவிடுவோம். அத்துடன் எங்கள் பணி முடிந்துவிட்டது என ஒதுங்கிடுவோம். போராட்டம் என் பது வெல்லும்வரை தொடர்ந்து முயற்சி செய்வது என்று யாரும் நினைப்பதில்லை.

சிலர் சமூக நலங்களில் அக்கறைகொண்டுநான் இவர்களுக்கு என்ன செய்யலாம், என்னால் செய்யக்கூடிய நன்மை என்ன என்று சிந்திப்பர். பலர் சிந்திப்பதுடன் நிறுத்திவிட்டாலும் சிலர் செயற்பாட்டில் இறங்கிடுவர். அவர்கள்தான் சமூகநேயம் கொண்டவர்கள் என அடையாளம் காணப் படுவர். இவ்வாறு நல்லெண்ணத்துடன் இயங்குபவர்கள் காலப் போக்கில் சமூக எதிரிகளாக இனம் காட்டப்படும் நிகழ்வுகளும் கால காலமாக அரங்கேறா மல் இல்லை. இவர்கள் எப்படி சமூக எதிரிகள் ஆகின்றனர் என்பதன் முன் போராட்டம் எவ்வாறு உருவெடுக்கிறது என்பது பற்றி சிந்திப் போம்.

ஒரு சமூகத்திற்கான போராட்டம் என்பது அந்த சமுகத்தின் உரிமைகள், நலன்களுக்காக தூர நோக்கில் திட்டமிடப்பட்டு மக்க ளது உடனடி நன்மைக்காக மட்டுமன்றி நீண்ட கால பயன்பாட்டுக்காகவும் நடக்கின்ற ஒன்று என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். இங்கு வெற்றி பெறுவதற்கு பல இழப்புகள் வந்தேதீரும். இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். இவை யாவும் தவிர்க்க முடியாதவை. இவை யாவும் சமுதாய சிறப் புக்காக அல்லது உலக மேன்மைக்காக நடக்கும் போராட்டங்களுக்கே பொருந்தும்.

கடந்த காலங்களில் உலகில் நடந்த போராட் டங்கள் இவற்றை எமக்கு பறைசாற்றுகின்றன. இந்த நிலைகள் யாவற்றையும் எதிர்கொண்டு உறுதியுடனும், நேர்மையுடனும், பொது நோக் குடனும் கடந்த போராட்டங்களே வெற்றி பெற்றுள் ளன. ஆனால் உறுதியான, ஆக்கபூர்வமான, மக்களுக்கு நன்மை தரும் போராட்டங்களை எந்த ஆட்சியாளர்களும் விரும்பமாட்டார்கள். எந்த மக்களுக்காக போராட் டம் நடக்குமோ அந்த போராட்டத்திற்கு எதிராகவே மக்களையே திசை திருப்புவர்.

உலக வரலாற்றில் எந்த ஒரு போராட்டமும் அடக்கப்பட வேண் டும் என்பதே கொள்கையாக நிலைத்துள்ளதே தவிர, போராட் டக்காரர்களின் கோரிக்கை என்ன, ஏன் அவர்கள் போராடுகிறார்கள், அவர்களின் குறைகள் என்ன என்று அறிந்து அதனை தீர்க்க, நசுக்கப்படும் மக்களுக்காக ஆபிரகாம் லிங்கன்கள் இந்த உலகில் தொடர்ந்து தோன்றவில்லை. மாறாக சமூக விரும்பிகளை வன்முறை கொண்டு அடக்கிடும் அரசுகள் அல்லது அவற்றின் ஏவலாளர்களே தொடர்ந்து உலகினை ஆள்கின்றார்கள். இந்த தவறான முன் உதாரணங்களே இன்றும் உலகில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

> **“புத்தம் போதிக்கும் நாட்டில் யுத்தம் நடக்கின்றதே தவிர அன்புநெறி நிலைக்கவில்லை அல்லது அரவணைத்துச் செல்லவில்லை.”**
>
> **“புத்தம் போதிக்கும் ஆட்சி. ஆனால் நித்தம் தமிழர்களுக்கு சோதனை. அன்புநெறி கூறினாலும், அடக்குமுறைக்கு குறைவில்லை.”**

அதை மக்களாகிய நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனென்றால் எங்களை எப்படியாவது காக்க வேண்டும் என்பதே எமது முதல் எண்ணம். இன்றும் இந்த புரிந்து கொள்ளாமை நிலையே எங்களை போராட்டத்தில் இருந்து விளக்கி வைக்கின்றது அல்லது அதனை வெறுக்க வைக்கின்றது. இதற்கும் மேலாக உயிர் ஆசை, சொத்துஆசை, வாழ வேண்டும் என்ற பேராசை என்பன எம்மை வாழ் வதற்குப் போராட தள்ளுகின்றனவே தவிர, சிந்திக்க ஊக்கப்படுத்தவில்லை. இந்த அடிப்படை காரணங்களே போராட்டம் தேவையற்ற ஒன்று என எம்மை நினைக்க வைத்து விடுகிறது. இதுவே உலக வரலாறு.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் வரும் வழியில் இறந்தவர்கள், வந்தும் வெளிநாடுகளில் இறந்தவர்கள், சமூகமும் கைவிட்டு சொந்தபந்தங்களும் இல்லாமல் மனம் உழன்று தற்கொலை செய்தவர்கள் என்றும் தொடர்ந்து சொல்லமுடியும். மேலும் இலங்கையில் கூட ஈழத்தமிழர் போராட்டம் ஆரம்பிக்க முன்பு மேதினம் என்பது பேரூந்துக் கட்டணம் குறைந்த நாளாகவும், சினிமா கொட்டை களில் குறைந்த கட்டணத்தில் சினிமா பார்க்கும் தினமாகவுமே பார்க்கப்பட்டதே தவிர அதன் பெறுமானம் என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை என்றுதான் சொல்லமுடியும். இன்றைய உலகம் மொத்த வியாபாரிகள் கைகளில் சுத்தமாக போய் சேர்ந்துவிட்டது.

சுதந்திர மனிதன் இயந்திர மனிதனாக மாறி



**அதை உலக்கு முரசறைவதற்கு தன்னுயிர் ஈந்த தியாகி திலீபன்**

விட்டான். பொதுவுடைமைவாதிகளின் கருத்துக்கள் தோற்றுவிட்டன. வாழ்க்கை பற்றித் தெரியாமலே மனிதன் அதன் பின் ஓடுகின்றான். என்னவென்று தெரியாமல் வாழ்க்கையை சுமையாக்கிக் கொண்டு ஓடுவதால் சிந்திக்க நேரமில்லை. சுயசிந்தனை தொலைந்து விட்டது. சுற்றிவிட்ட பம்பரம்போல் சுழன்றுகொண்டு வாழ்கிறான். இதனால் வியாபார உலகம் நன்மை கண்டது. வெற்றிபெற்றது என்பது கண்கூடு.

அதனால்தான் பொதுவுடைமைவாதி சொன்னான் சுதந்திரம், உரிமை என்பவற்றை பெற்றுக் கொடுத்தால் மட்டும் போதாது, அவற்றை அனுபவிக்க கற்றும் கொடுக்கவேண்டும் என்று. காரணம் மக்கள் அவற்றை அனுபவிக்க விரும்புவதில்லை. ஏனென் றால் உரிமைகளை கேட்டு நாம் இருப்பவற்றையும் இழந்து விடுவோம் எனப் பயப்படுவர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளத்தில் மூழ்கின எட்டு மாவட்டங்கள் !

## 80 ஆயிரம் பேர் பாதிப்பு







சீரற்ற வானிலையால் 8 மாவட்டங்களில் 20,815 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 80,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக, கம்பஹா மாவட்டத்தில் 43 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர்முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 14,899 பேர், 42 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

களு மற்றும் கிங் கங்கைகளின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துள்ளதுடன், அத்தனகல ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் பிரிவுப் பணிப்பாளர் மாலா அலவத்துகொட தெரிவித்துள்ளார்.

மழையுடனான வானிலையால் காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளுக்கு மின்விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன், அதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மின்சக்தி அமைச்சு அறிவித் துள்ளது.

கடும் மழை மற்றும் பலத்த காற்றின் காரணமாகக் காலி, மாத்தறை, களுத்துறை, கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களே கடுமையான பாதிப்புக்குள்ளாகியமையுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டது. பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் வரவு பெரிதும் குறைவடைந்து காணப்பட்டது.

வீதிகளில் நீர் நிரம்பிக் காணப்பட்டதால், வாகனப் போக்குவரத்து, நெரிசலுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது.

நாட்டில் கடந்த 48 மணித்தியாலங்களுக்குள் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி கட்டுநாயக்க பிரதேசத்திலேயே பதிவாகியிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டது.

மேற்படி மாவட்டங்களில் கடந்த இரண்டு தினங்களாக ஏற்பட்டுள்ள மண்சரிவு, வெள்ள அனர்த்தங்களால் நேற்று முன் தினம் மாலை வரை ஒரு பெண் உயிரிழந்துள்ளமையுடன் ஆறு பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளரும் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதேவேளை, இன்றும் அதனைத் தொடர்ந்து வரும் சில நாள்களுக்கும் மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சுமார் 200 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யு மென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. கடலில் மழை பெய்யும் அதே நேரம் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் கடலுக்குச் செல்லும் மீனவர்களும் கடற்படையினரும் எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ)

# கோவில் பிணக்குகள் நீதிமன்றம் செல்லாது தடுக்க வேண்டுகோள்

கொழும்பு, செப். 26

கோவில் நிர்வாகங்களில் ஏற்படும் பிணக்குகள், நீதிமன்றம் வரை சென்று அவமானப்படுவதைத் தவிர்க்கு முகமாக, மாவட்ட மட்டத்தில் புத்திஜீவிகள் அடங்கிய மதியுரைக்குழு நியமிக்கப்படவேண்டுமென, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசனிடம் அம்பாறை மாவட்ட இந்து சமய ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பல கோவில்கள், நீதிமன்றம் செல்வதற்கான ஏற்பாடுகளை எடுத்து வருகின்றன.

இலங்கை நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின்படி கோவில் பிணக்குகளைத் தீர்க்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவை உரியகாலத்தில் தீர்த்துவைக்கப் படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுவதால் முறைப்பாட்டுக் காரர் கள் வேறுவழியின்றி நீதிமன்றம் செல்கின்றனர். இது தேவையற்ற பணவிரயம் என்பதற்கு அப்பால் கோவில்களுக்கான கௌரவத்தையும் இழக்கச்செய்கிறது.

எனவே, இப்படிப்பட்ட பிணக்குகளுக்குத் துரிதத் தீர்வுகளை வழங்க தகுதியான சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் 10 பேர் அடங்கிய மதியுரைக்குழுவை நம்பிக் கைக் கட்டளைச் சட்டத்தின்படி நியமித்து, இந்துக்களின் கௌரவத்தைக் காக்குமாறு அம்பாறை மாவட்ட இந்து சமய ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுதுள்ளனர். (ஐ)

# திலீபன் நினைவு நடைபயணத்துக்காக இன்று நாவற்குழியில் ஒன்றுகூடுங்கள்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நடை பயணத்துக்காக அனைத்துத் தமிழ் உணர்வாளர்களையும் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நாவற்குழிச் சந்தியில் ஒன்று கூடுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

திலீபனின் கோரிக்கைகள் நினைவேறவும் தமிழ் மக்களின் அபிலாசைகள் வெற்றி பெறவும் அனைத்து சமூக தரப்புக்களையும் ஒன்றினையுமாறும் அவர் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் தேசம், இறைமை, சுயநிர்ணைய உரிமை என்பவை அங்கரிக்கப்பட வேண்டும். தீயாக தீபம் திலீபனின் வலியுறுத்திய 5 அம்சக் கோரிக்கையில் பௌத்த மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடைபயணம் வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

திலீபனின் நினைவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் எமது இளைஞர் அணியினர் இந்த நடைபயணத்தை நடத்துகின்றனர்.

இந்தக் கோரிக்கைகள் வலுவடைவதற்கும், வெற்றி பெறுவதற்கும், அதற்காக நடக்கும் நடைபயணம் வெற்றி பெறவும் திலீபனை நேசிக்கும் – அவரின் உன்னததியாகங்களை மதிக்கும் அனைத்து உணர்வாளர்களும் எம்மோடு கைகோர்க்க வேண்டும் என்று நாம் கோரி நிற்கின்றோம். அனைத்துச் சமூக தரப்பினர்களும் இந்த நடைபயணத்தில் கலந்து கொள்ளவேண்டும்.

இன்று இறுதி நாள் அன்று நாவற்குழிப் பகுதியில் இருந்து அந்த நடைபயணத்தை திலீபனின் நினைவுத் தூபி நோக்கி நகர்த்த உள்ளோம். அன்று காலை 8 மணியளவில் அலையென தமிழ் உறவுகள் அனைவரும் ஒன்றுகூடவேண்டும். அங்கிருந்து புறப்படும் நடைபயணம் முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஆலய வடக்கு வீதியில் திலீபன் உயிரிழந்த இடத்தைச் சென்றடையும் – என்றார். (ஐ - 07)

# கப்பூதுவெளிக் காட்டுக்குள் கசிப்பு உற்பத்தி முறியடிப்பு



யாழ்ப்பாணம், செப். 26

வடமராட்சி கப்பூதுவெளிப் பற்றைக் காட்டுக்குள் நள்ளிரவில் கசிப்பு உற்பத்தி பொலிஸ் சிறப்புப் பிரிவினரால் முறியடிக்கப்பட்டுள்ளது. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கரவெட்டியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

985 லீற்றர் கோடா, 2 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 5 பரல்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் கூறினர்.

சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர் நெல்லியடிப் பொலிஸ் நிலையைத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி. சேனதிராசாவின் உத்தரவில் அவரின் கீழான சிறப்பு பொலிஸ் பிரிவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. (ஐ)

# வீட்டில் கொள்ளையிடச் சென்றவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து சாவு!

## யாழ்ப்பாண நகர பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் நகரில் வீடொன்றுக்குள் கொள்ளையிடும் நோக்குடன் நுழைந்திருப்பார் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் அந்த வீட்டின் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அவர் கிணற்றுக்குள் வீழ்ந்து சத்தம் கேட்டதையடுத்து கிணற்றைச் சென்று பார்த்த வீட்டு உரிமையாளர் பொலிஸாரை அழைத்து வரச் சென்றுள்ளார். அப்போது அவர் கிணற்றுக்குள் தத்தளித்துள்ளார். எனினும் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்லத் தாமதித்ததால் கிணற்றுக்குள் வீழ்ந்தவர் உயரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஸ்ரீதர் தியேட்டருக்குப் பின்புறமாக யாழ்.வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பும்ரா விலகல்



இந்தியாவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பும்ரா, முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக தென்னாபிரிக்கா தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ரி20 கிரிக்கெட் தொடர் முடிந்துள்ள நிலையில், எதிர்வரும் 2 ஆம் திகதி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தொடங்குகிறது. இதற்கான இந்திய அணியில் பும்ரா இடம் பிடித்திருந்தார்.

இந்நிலையில் முதுகுத் தண்டில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளமையால் தொடரில் இருந்து பும்ரா விலகியுள்ளார் என இந்தியக் கிரிக்கட் சபை தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. அவருக்குப் பதிலாக உமேஷ் யாதவ் அணியில் இடம் பிடித்துள்ளார்.

முதன்முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டியில் விளையாடும் ஆர்வத்தில் இருந்த பும்ராவுக்கு, காயம் தடைக்கல்லாக அமைந்துவிட்டது. பும்ரா இல்லாதது இந்திய அணிக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

# முடிவு தெரியும் வரை ‘சுப்பர் ஓவர்’

இங்கிலாந்தில் இடம்பெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நான்கு ஓட்டங்களின் (பவுண்டரிகள்) அடிப்படையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டதால், பிக் பாஷ் தொடருக்கு புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வருட நடுப்பகுதியில் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப் போட்டியை யாராலும் மறக்க முடியாது.

நியூசிலாந்து – இங்கிலாந்து அணிகள் மோதிய இறுதிப்போட்டி சமனிலையில் முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட சுப்பர் ஓவரும் சமனிலை யில் முடிவுற்றது.

இதனை அடுத்து ஐ.சி.சி.யின் போட்டி விதிகளின் படி அதிக நான்கு ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி கிண்ணம் வென்றதாக அறிவிக் கப்பட்டது.

ஐ.சி.சி.யின் இந்த முடிவு பலருக்கும் ஏமாற்றம் அளித்திருந்தாலும் ஏற்கனவே அனைத்து அணிகளும் ஏற்றுக் கொண்ட விதி என்பதால் அதை எவராலும் விமர்சிக்க முடியவில்லை.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ‘பிக் பாஷ்’ தொடரில் போட்டி சமனிலையில் முடிந்தால், அதன் பின் முடிவு கிடைக்கும் வரை சுப்பர் ஓவர் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மழை காரணமாக கைவிடப்பட்ட இறுதிப்போட்டி



பங்களாதேஷ் – ஆப்கானிஸ்தான் மற்றும் சிம்பாவே அணிகளுக்கு இடையில் நடைபெற்று வந்த முத்தரப்பு ‘ருவென்ரி 20’ தொடரின் இறுதிப் போட்டி சீரற்ற கால நிலை காரணமாக கைவிடப்பட்டது.

இதனால், வெற்றிக்கிண்ணம் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் பகிரப்பட்டது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ‘ருவென்டி 20’ தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை டாக்காவில் ஆரம்பமாகவிருந்தது.

எனினும், போட்டி ஆரம்பிக்கும் முன்னர் இருந்து சீரற்ற காலநிலை நீடித்து வந்தது. இதன் காரணமாக நாணயச் சுழற்சி தாமதமாகிய நிலையில், போட்டி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்தும் மழை குறுக்கிட்ட நிலையில், சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு பின்னர் போட்டி கைவிடப்படுவதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதுமாத்திரமின்றி, இறுதிப் போட்டியை நடத்துவதற்கு மேலதிக நாள் இல்லாத காரணத்தால், இரண்டு அணிகளுக்கும் கிண்ணம் பகிரப்படுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் முத்தரப்பு ‘ருவென்ரி 20’ தொடருக்கான கிண்ணத்தை பகிர்ந்துகொண்டன.

இந்தப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்களைப் பொறுத்தவரை, சிம்பாவே அணி ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான தங்களுடைய இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற போதும், இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தது.

அத்துடன், இந்தப் போட்டியுடன் சிம்பாப்வே அணித் தலைவர் ஹமில்டன் மசகட்ஸா சர்வதேசப் போட்டிகளிலிருந்து தனது ஓய்வையும் அறிவித்திருந்தார்.

எனினும், பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகளிலும், ஆப்கானிஸ்தான் அணி இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றிருந்த நிலையில், இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை தக்கவைத்திருந்தன.

இவ்விரண்டு அணிகளும் மோதிய முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்ததுடன், இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருந்தது.

இதேவேளை, இறுதிப் போட்டி கைவிடப்பட்டபோதிலும் போட்டித் தொடரின் தொடர் ஆட்ட நாயகன் விருதினை ஆப்கானிஸ்தான் அணியின், ரஹ்மனுல்லாஹ் குர்பஸ் பெற்றுக்கொண்டார்.

பரிசளிப்பு நிகழ்வின் பின் கருத்துத் தெரிவித்த ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் ரஷீட் கான், ‘பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் வெற்றியைப் போலவே, முத்தரப்பு ‘ருவென்டி 202 தொடரிலும் வெற்றிபெற எதிர்பார்த்து தயாராகியிருந்தோம். துரதிஷ்டவசமாக மழை காரணமாக எங்களால் வெற்றிபெற முடியாது போனது’ எனக் குறிப்பிட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன், ‘இறுதிப்போட்டியைக் காண பல ரசிகர்கள் வந்திருந்தார்கள். ஆனால், எங்களால் போட்டியில் விளையாட முடியாமல் போனமை வருத்தமே. இந்த தொடரில் இளம் வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார்கள்.

ஒரு அணியாக சிறந்த பெறுபேறுகளை அனைவரும் வெளிப்படுத்தினார்கள். எனவே, எதிர்வரும் இந்திய அணிக்கு எதிரான தொடருக்காக நாங்கள் தயாராகின்றோம்’ எனக் கூறினார்.

# பாகிஸ்தானை சென்றடைந்தது இலங்கை அணி

ஒருநாள் மற்றும் ‘ருவென்ரி 20’தொடர்களில் பங்கேற்பதற்காக இலங்கைக் கிரிக்கெட் அணி நேற்றுமுன் தினம் செவ்வாய் கிழமை பாகிஸ்தானைச் சென்றடைந்துள்ளது.

ஏற்கனவே உறுதி அளித்ததைப் போல பாகிஸ்தான் அரச தலைவருக்கு வழங்கப்படும் உயர் பாதுகாப்பைப் போல அங்குள்ள இலங்கை வீரர்களுக்கும் பாகிஸ்தான் அரசு பாதுகாப்பை வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை கராச்சியில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கென, நேற்றுமுன்தினம் மதியம் இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற மத அனுஷ்டானங்களைத் தொடர்ந்து இலங்கை வீரர்கள் பாகிஸ்தான் புறப்பட்டுச் சென்றார்கள்.

பாகிஸ்தானின் தெற்கு துறைமுக நகரான கராச்சியை நேற்றுமுன் தினம் மாலை சென்றடைந்த இலங்கை வீரர்கள் பலத்த பாதுகாப்புடன் அவர்கள் தங்கும் நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கராச்சியில் மூன்று ஒருநாள் போட்டிகளும் எதிர்வரும் 27, 29 மற்றும் ஒக்ரோபர் 2 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மூன்று ‘ருவென்ரி 20’ போட்டிகள் லாகூரில் இடம்பெறவுள்ளன. இந்த நகரில் வைத்துத்தான் இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது கடந்த 2009 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 8 பேர் கொல்லப்பட்டமையுடன், சில இலங்கை வீரர்களும் காயமடைந்தனர்.

இந்தக் காரணத்தினாலேயே கடந்த 10 வருடங்களாக பாகிஸ்தானுக்கு சிம்பாவே, ஆப்கானிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் தவிர்ந்த எந்தவொரு சர்வதேச அணியும் விளையாடுவதற்குச் செல்வதில்லை.

அதுமட்டுமல்லாது இம்முறை இலங்கை அணியின் பாகிஸ்தான் விஜயத்தை ஒருநாள் அணித்தலைவர் திமுத் கருணாரட்ன, ருவென்ரி 20 அணித்தலைவர் லசித் மாலிங்க உள்ளிட்ட 10 முக்கிய வீரர்கள் புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் தொடர்: எதிர்பார்ப்பு மிக்க இந்தியா அணி அறிவிப்பு

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இந்திய அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரிலும், மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இதே தொடரின் இறுதி தொடரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் மீண்டும் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்தில் முதலாவதாக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், 1 – 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில், ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்து நடைபெறவுள்ளது.

இதற்கான இந்திய அணி விவரம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ரா, உபாதைக்குள்ளாகியுள்ளதால், அவருக்குப் பதிலாக உமேஷ் யாதவ் அணியில், சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

உமேஷ் யாதவ், இறுதியாக 2018ஆம் ஆண்டு பேர்த்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியில் விளையாடியிருந்தார்.

இதேபோல, உள்ளூர் மற்றும் இந்திய ஏ அணிகளுக்கிடையிலான போட்டியில், சிறப்பாக துடுப்பெடுத்தாடிய இளம் வீரர் சுப்மான் கில்லுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதேபோல தமிழக முன்னணி சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வி னுக்கும் அணியில், வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான கே.எல் ராகுல் அணியிலிருந்து நீக்கப்பட்டு, ரோஹித் சர்மாவுக்கு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இதுதவிர இறுதியாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடிய ஹனுமா விஹாரிக்கு அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், மாயங் அகர்வால், ரோஹித் சர்மா, செடீஸ்வர் புஜாரா, அஜிங்கியா ரஹானே, ஹனுமா விஹாரி, ரிஷப் பந்த், ரித்திமான சஹா, அஸ்வின், ஜடேஜா, குல்தீப் யாதவ், மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், இஷாந் சர்மா, சுப்மான் கில் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# மழையால் பாதிப்புற்றோருக்கு பாகுபாடின்றி உதவவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த கோரிக்கை



கொழும்பு, செப். 26

நாடு முழுவதும் நிலவும் மோசமான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அவசர நிவாரணம் வழங்க விரைவாகச் செயல்படுமாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இந்த மோசமான காலநிலை காரணமாக சுமார் 11 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவுறுத்தலை பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அனைவருக்கும் அவர் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் அனைத்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிவாரண நடவடிக்கைகளை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யுமாறும் அவர் கோரியுள்ளார்.

அத்தோடு அரசும் விரைவாகச் சென்றுபாதிக்கப்பட்டவர்களின் அவல நிலைகள் குறித்து ஆராயவேண்டும் என்றும் மஹிந்த கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# சஜித்தை வேட்பாளராக்க இணங்கிவிட்டார் ரணில்

## அமைச்சர் கிரியெல்ல அறிவிப்பு



கொழும்பு, செப். 26

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புக் கொண்டுள்ளார் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நேற்று முன்தினம் இரவு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுடன் நடந்த சிறப்புக்கலந்துரையாடலின்போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

அமைச்சர் கபீர் ஹாஷிம், அமைச்சர் ரவி கருணநாயக்க, அமைச்சர் நவீன் திசாநாயக்க, அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

தேவைப்பட்டால் கட்சி தலைமையை விட்டு வெளியேறத் தயாராக இருப்பதாக ரணில் கூறினார்.

கட்சியின் மூத்த தலைவர்கள் அனைவரும் இந்த முடிவை எதிர்த்தனர். பிரதமர் தலைமை தாங்கிக் கட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவேண்டும் என்று அவர்கள் கோரினர் – என்றார். (ஐ)

# பயிலுநர் செயல்திட்ட உதவியாளர் நியமனம் உடனடி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 26

பிரதமரின் கீழான பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் பயிலுநர் செயல்திட்ட உதவியாளராக நாடு முழுவதும் வழங்கப்பட்டிருந்த நியமனத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தி அறிவுறுத்தல் வழங்கியது.

இதனால் அந்தப் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் நியமனம் பெற்ற ஆயிரத்து 440 பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்தப் பதவிக்கான நியமனக் கடிதங்களும் அரசினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தெரிவாகியவர்கள் யாழ் மாவட்ட செயலகத்தில் தமது நியமனத்தைப் பொறுப்பேற்க அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை நேரத்தில் அங்கு அமர்த்தி வைக்கப்பட்டனர்.

எனினும் அதற்கு முன்தினம் மாலை 4 மணியளவில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த தொலைநகல் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் எந்த நியமனமும் வழங்கப்படக்கூடாது என்ற நிபந்தனையை உள்ளடக்கிவந்தமையினால்பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் இடைநிறுத்தப்படுவதாக யாழ்.மாவட்ட உதவி அரச அதிபரினால் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அமர்ந்திருந்தவந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனால் நியமனம் பெற வந்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பியமையுடன் அரசையும் திட்டித் தீர்த்தனர்.

நாடு முழுவதும் உள்ள கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில் தேசிய ரீதியில் க.பொ.த உயர்தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிப்பதற்காகக் கடந்த ஜூன் மாதம் முதல் கொழும்பில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் கடந்த 16ஆம் திகதி மேற்படி நியமனம் வழங்கப்பட்டு பணிக்கமர்த்தப்படும் ஊழியர்களில் வடக்கின் 5 மாவட்டத்திற்குமாக மொத்தம் ஆயிரத்து 440 பேர் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆயிரத்து 440 பேரில் அதிக பட்சமாக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 999 பேர் நியமனம் செய்யப் பட்டனர்.

இதேபோன்று கிளிநொச்சிமாவட்டத்திற்கு 105 பேரும், முல்லைத்தீவுமாவட்டத்திற்கு 144 பேரும்நியமிக்கப்பட்டுள்ளமையோடு மன்னார் மாவட்டத்திற்கு 100 பேரும் வவுனியா மாவட்டத்திற்கு 92 பேரும்நியமிக்கப்பட்டனர். பயிலுநர் செயற்திட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டவர்களுக்குபயிற்சிக் காலத்துக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் அக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படும் எனவும் வழங்கப்பட்ட நியமனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஐ)

# யாழ்ப்பாணம், கண்டி,மேல் நீதிமன்றுகளுக்கு செவ்வாய்க்கிழமை முதல் மேலதிக அதிகாரம்

கொழும்பு மேல் நீதிமன்றுக்கு உள்ள வர்த்தகப் பிணக்குகளை தீர்க்கும் நடுத் தீர்ப்பாளர் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் யாழ்ப்பாணம், கண்டி மேல் நீதிமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கட்டளையை நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள அதிசிறப்பு வர்த்தமானி மூலம் வழங்கியுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்திலும், கண்டி நீதி நிர்வாக வலயத்திலும் இயங்கும் இலங்கை மேல் நீதிமன்றங்களில் 1995ஆம் ஆண்டு 11ஆம் இலக்க நடுத்தீர்ப்பாளர் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசரின் இணக்கப்பாட்டுடன் இந்தக் கட்டளை நிறைவேற்றப்படுவதாக நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் வர்த்தக மேல் நீதிமன்றம் கொழும்பில் மட்டுமே இதுவரை காலம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

தினக்குரல் AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Online Media LANKASRI



பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com






# உறை கடலில் ஊடுருவல்

(நேற்றைய தொடர்ச்சி)

உயிர் தப்பி மீண்டு வந்த அதிசயத்தை நினைந்து உருகினான். இந்த கணம் நிஜமானது தானே. இது வெறுங் கனவு இல்லையே என்று சிந்தித்துக் கொண்டான்.

1937 இல் இருந்து சோவியத் ஆதிக்கம் ஆய்வுகள் என்பன வட துருவத்தில் வலுப் பெற்றே வந்திருக்கின்றன. சோவியத்தின் கரையோரங்கள் மற்றும் பல துறைமுகங் கள் இந்தப் பிராந்தியத்தில் அமைவதனால் இரண்டாம் உலக யுத்த வேளைகளில் தனது கப்பல் போக்குவரத்துப் பாதையாக இதனைப் பேணிக்கொள்ள சோவியத் முனைந்தது. இதனை ஜேர்மனி ஆட்சேபித்தும் இருந்தது.

1954 இலிருந்தே வணிகப் போக்குவரத்து விமானங்கள் ஆக்டிக் வட்டத்தை குறுக்கறுத்து தமது பயணப் பாதையை வகுத்துக் கொண்டன.

உலோகங்களைத் தேடி கி.மு 325 இல் இப்பிராந்தியத்தை லவாநயள என்ற கிரேக்க மாலுமி அடைந்ததாக தகவல் உள்ளது. அவனது பயணக் கதைகள் சுவாரசியமானவை. கடலும் பனிப் படையும் சந்திக்கும் நோர்வே எல்லைகளை அவன் கடந்து எவ்வளவு தூரம் பயணித்தான் என்பது தெளிவாக இருக்கவில்லை. உறுதி செய்ய முடியாத இவை உருவகக் கதைகள்



எனவும் நிராகரிக்கப் பட்டன.

இன்றும் மக்கள் தமது சிற்றறிவுக்கு எட்டாத பல விடயங்களை இல்லை என்று நிராகரிப்பதில் பெருமைப்படுகிறார்கள். புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள அருமையான கருத்துக்கள், அறிவுரைகள், அனுபவங்கள் உதாசீனப் படுத்தப் படுவது கவலைக்குரியது.

கடும் குளிரையும் பனிப் பாளங்களை கடந்து பயணிப்பதையும் சமாளிக்கவல்ல தொழில் நுட்பங்கள் அன்று போதியதாக இருக்கவில்லை. இன்று போல வடதுருவ பிராந்தியங்களில் அபிவிருத்தியடைந்த நகரங்கள் தொலைத் தொடர்பு வசதிகளுடன் காணப்படவில்லை. உணவினை சேமித்து எடுத்துச் செல்லும் வசதிகள் இருக்கவில்லை. ஊடகங்கள், பதிவுகள் இருக்கவில்லை. தொலமியின் தேசப்படம் 15ம் நூற்றாண்டில் அறிமுகமாகும்வரை துணிந்த மாலுமிகளின் அனுபவங்கள் புழுகுகளாகவே கருதப் பட்டிருக்கலாம். அப்போது கொலம்பஸ் அமொக்காவை கண்டு பிடித்திருக்கவில்லை. அத்திலாந்திக் சமுத்திரம் ஊடாக கிழக்கே உள்ள ஆசியாவை மேற்காகத் தேடிப் போன வழியில் அமொக்கா சந்தித்தது.

அவ்வாறே இங்கிலாந்தில் இருந்து ஆக்டிக் ஊடாக மேற்கே ஆசியாவை நோக்கிய பயணம் கனடாவில் முடிந்தது.

1609 இல் இங்கிலாந்தின் ஹென்றி ஹட்சன் சென்றடைந்த இடங்கள் அவனது பெயரால் இன்றும் நிலைக்கின்றன. நியு யோர்க்கின் 507 கி.மீ நீளமான ஹட்சன் நதி கனடாவின் ஹட்சன் குடா என்பன அவையாகும்.

பலரும் துருவ பாதைகளை கண்டு பிடிக்க முனைந்தாலும் பல ஆண்டுகள் பிடிக்கும் இந்தப் பயணங்கள் பனிப்படைகள் ஆழமற்ற கடற் பரப்புக்கள் போன்ற சிக்கல்களினால் வர்த்தக ரீதியாக பயனற்றவை ஆகவே இருந்தன. ஆய்வுகள் வேட்டை மற்றும் உல்லாசம் என்ற வகையில் இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப் படலாம்.

கிறீன்லன்டை சோந்த **Knud Rasmussen** (1879 - 1933) பல தடவைகள் நாய்ச் சறுக்கு வண்டியில் ஆக்டிக் பிராந்தியத்தை குறுக்கறுத்துச் சாதனைகளை புரிந்தவன் ஆகிறான். அவனுடைய பல சுற்று **Thule Expedition** பணயங்கள் பிரபல்யமானவை.

முதலாவது தூல் பயணம் 1912 இல் நாய் சறுக்கு வண்டியில் 1000 கி.மீ நீண்ட தூர சாதனை என்றாலும் இவர்களை கொல்லாத குறையாக மீண்டு விட்டனர்.

இரண்டாவது தூல் பயணத்தில் 1916 இல் ஏழு போ இணைந்து கொண்டனர். இவர்களில் இருவரை பலி கொடுக்கும் துாப்பாக்கிய நிலமை றமசெனுக்கு ஏற்பட்டது.

ஐந்தாவது தூல் பயணம் 1921-1924 பல சாதனைகளை நிகழ்த்தி இருந்தது. அகழ்வாராய்ச்சிகள் உயிரியல் ஆய்வுகள், தடயங்கள் சேகரிப்பு எனப் பல கோணங்களில் இது பயன்பட்டது. தடயப் பொருட்கள் இன்றும் டென்மார்க் நூதன சாலைகளில் பேணப் படுகின்றன.

வட துருவ பயணங்கள், விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வுக் கட்டுரைகள், என்று கிறீன்லண்ட் டென்மார்க் இடையே பல தடவைகள் றமசென் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான்.

ஏழாவது தூல் பயணம் அவனுக்கு எமனாக மாறிவிட்டது. உணவு ஒவ்வாமை அவனை நோயாளி ஆக்கி விட்டிருந்தது. 54 வயதில் மரணம் அந்தச் சாதனை வீரனை அரவணைத் துக் கொண்டது.

இவனது குழுவில் செயற்பட்ட றொபேட் பொ 6 ஏப்ரல் 1909 இல் வட துருவத்தை நாய் வண்டியில் எட்டியதாக பதிவு செய்தாலும், அது



உண்மையானால் அவனே முதன் முதலில் துருவ மையத்தை எட்டியவன் ஆகிறான் என்றாலும், அதனை ஆதார பூர்வமாக நிரூபிக்க இயல வில்லை. நவீன ஆய்வாளர்கள் மற்றும் பனிச் சறுக்கு வீரரர்கள் இது சாத்தியமான ஒன்றல்ல. அதுவும் நாய் வண்டியில் அன்று இருந்த வசதிகளுடன் முடியாத காரியம் என்றே இன்றும் வாதிடுகிறார்கள்.

எமது புராணக் கதைகளில் வரும் சம்பவங்கள் பற்றிய நவீன புத்திஜீவிகளின் மறுப்புக்கள் போலவே இச் சாதனைகள் சர்ச்சைக்குரியவை ஆகக் காணப்படுகின்றன. ஆனாலும் அபார சக்தியுடன் றொபேட் பொதுருவ மையப்புள்ளியை நெருங்கி இருக்கக் கூடும்.

1926 மே 12 இல் துருவப் பகுதிக்கு மேலாக நோஜ் என்ற ஆகாயக் கப்பலில் பறந்த நோர்வேஜியன் வட தென் துருவ பயண மன்னன் **Roald Amundsen** இனது சாதனை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவர்கள் காலடி பதிக்காத போதும் வடதுருவ மையத்தை கண்களால் கண்டு மீண்டது உறுதியாகிறது. இவனே தென் துருவத்தையும் முதன் முதலில் எட்டியவன் என்று கண்டிருந்தோம்.

1928 இல் வட துருவ பிராந்தியத்தில் விபத்தில் சிக்கிய இற்றாலியா (**airship Italia**) என்ற ஆகாயக் கப்பலை மீட்க கடல் விமானத்தில் சென்ற **Roald Amundsen** குழுவினரும் காணாமல் போய் விட்டனர். இற்றாலியா குழுவினர் பாதுகாப்பாக மீட்கப் பட்டாலும் உதவிக்குச் சென்ற **Roald Amundsen** குழுவினரின் விமானமோ உடல்களோ இன்றுவரை கண்டு பிடிக்கப் படவில்லை.

2004 இலும் நோர்வே குழு ஒன்று 100 சதுர கி.மீ துருவப் பரப்பில் இவர்களது கடல் விமான சிதைவுகளை தேடி அலுத்து விட்டது.

இவ்வாறு பல சாதனைகள் வேதனைகளை தன்னகத்தே தாங்கிய துருவப் பகுதி இன்றும் ஆய்வுக்கு உரியதாக உறைந்து கிடக்கிறது.

எந்தவிதச் சந்தேகத்துக்கும் இடமின்றி முதன் முதலில் வட துருவத்தை நடந்து கடந்தவர்கள் என்றால் 1948 இல் (இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டில்) ரஷ்யர்களான **Alexander Kuznetsov** குழுவினர்தான். இவர்கள் விமானத்தில் சென்று துருவத்தை நெருங்கி தரையிறங்கி நடந்து கடந்து இருந்தனர்.

1958 இல் அமொக்க நீர்மூழ்கி கடலடியில் துருவத்தை எட்டியிருந்தது. இது கடல் மேற் பரப்பில் வெளப்பட்டிருக்க வில்லை.

1968 இல் முதன் முதலில் தனது சொந்த உடற் பலத்தை நம்பி சறுக்கு வண்டியில் துருவத்தை எட்டிய **Ralph Plaisted** இனது சாதனைகள் வரலாற்றில் பதியப் படுகின்றன.

1995 இல் வெளியார் உதவி இன்றி, நாய்கள் சறுக்கு வண்டிகள் இன்றி, விமானங்கள் இன்றி, பொருட்கள் மீள் விநியோகம் இன்றி தனித்து தாமாக இருவர் **Richard Weber (Canada) and Misha Malakhov (Russia)** வட துருவத்தை அடைந்து மீண்டிருக்கிறார்கள் என்றால் அது சாதனைதான். அதனை இன்றுவரை மீண்டும் எவரும் முயற்சிக்க வில்லை.

வரலாறு தொயாத பதிவுகள் கிடையாத காலத்தில் மனிதன் இப் பிராந்தியங்களை சர்வசாதாரணமாக கடந்து வந்திருக்கக் கூடும். இமய மலையில் சித்தர்கள் வாழ்ந்த கதைகளை வெறுமனே உதாசீனம் செய்துவிட முடியாது.

தென் துருவத்தில் தென் கடல் சூழ நடுவில் ஓரளவிற்கு வட்ட வடிவாக அன்ராட்டிக்கா கண்டம் அமைந்துள்ளது. மாறாக வட துருவத்தில் நாட்டு தரைப் பரப்புக்கள் சூழ நடுவில் ஓரளவிற்கு வட்ட வடிவாக ஆக்டிக் கடல் அமைந்து விட்டது. கடலெது கண்டமெது என்று தொயாத வகையில் இரண்டுமே பனிப் போர்வையால் போர்க்கப் பட்டுள்ளன. இரு துருவங்களையும் இரண்டு திசைகளாகப் பயணித்துத் தடம் பதித்த நோர்வேஜியன் வட தென் துருவ பயண மன்னன் **Roald Amundsen** தான் என்றால் மிகையாகாது.

(இன்னும் வரும்)

# பூலோகத் தமிழ்மாமலை அமரர் பூலோகசிங்கம்

**இன்று (26.9.2019) வியாழக்கிழமை கலாநிதி பூலோக சிங்கத்தின் இறுதிக் கிரியைகள் ஆஸ்திரேலியா விலுள்ள சிட்னி மாநகரில் நடைபெற இருக்கின்றன. அதனையொட்டி இந்த ஆக்கம் வெளி வருகின்றது.**



கொழும்பு, களனி, பேராதனை ஆகிய பல்கலைக் கழகங்களிலே விரிவுரையாளராகப் பணியாற்றி, இணைப் பேராசிரியராகவும் உயர்ந்து தமிழ்த்துறைக்கு எண்ணிப் பார்க்க முடியாத அளவு பங்களிப்புச் செய்த கலாகீர்த்தி கலாநிதி பொ.பூலோக சிங்கம் அவர்கள் 19.9.2019 அன்று விண்ணுலகெய்தியமை அவரின் ஏக புதல்வன் பூபாலனுக்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பேரிழப்பாகும். இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளிலும் வாழும் உரிமை பெற்றிருந்த கலாநிதி பூலோகசிங்கம் உலகம் வாழ் தமிழறிஞர்களாலும் நன்கு அறியப்பட்டவராவார்.

இவர் 1936 ஆம் ஆண்டு சித்திரை முதலாம் திகதி வவுனியாவைச் சேர்ந்த பொன்னையா உடையார் சோதிரத்தினம் தம்பதியருக்கு நான்காவது புத்திரராக செட்டிகுளத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியினை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்று அங்கிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு (பேராதனை) அனுமதி பெற்று அங்கே பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், ஆ.சதாசிவம், ச.தனஞ்சயராச சிங்கம், சு.வித்தியானந்தன் ஆகியோரிடம் தமிழைச் சிறப்பாகக் கற்று, 1961 இல் முதலாம் வகுப்பில் சித்தி பெற்றார்.

1963 தொடக்கம் 1965 வரை பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பெயர் பெற்ற திராவிட மொழியியலறிஞர் பேராசிரியர் தோமஸ் பரோவின் (Thomas Bu-rrow) கீழ் மொழியியல் ஆராய்ச்சியை மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றவர். 1965 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகச் சேர்ந்து தமது பணியை ஆற்றத் தொடங்கினார். நிறைவாக, 1997 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இணைப் பேராசிரியர் பதவியை விட்டு விலகி ஆஸ்திரேலியா சென்றார்.

இவர் தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள் (1970, 2002), ஈழம் தந்த நாவலர் (1993), 'Poet Tambimuttu – A Profile' (1993), நாவலர் பண்பாடு (2000), சிலப்பதிகார யாத்திரை (2002), தமிழ் ஆய்வுச் சிந்தனைகள் (2017) ஆகிய நூல்களின் ஆசிரியர். இந்துக் கலைக்களஞ்சியம் பகுதி 1 (1990) செய்தவர். சு.சதாசிவம் பிள்ளையின் பாவலர் சரித்திரதீபகம் பகுதி 1, பகுதி 2. ஆகியவற்றை அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப்பித்தவர். கொழும்புத் தமிழ்ச்சங்கம் இந்த இரண்டு நூல்களையும் வெளியிட்டது.

நூல்கள் தவிர பல்வேறு மலர்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளிலே பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை தமிழிலக்கியம், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு, சமயம் என்பன சார்ந்தவை. வையாபாடலைப் பற்றிய கட்டுரை, ஆங்கில இலக்கியவானிலே பட்டம் அச்சுவேலி பாவலர் தம்பிமுத்து (1990), அதிவணக்கத்துக்குரிய திமோதி எம்.எவ்.லோங்சுவாமிகள் (1990), பண்டைய அகப்பாடல்களும் சுய சரிதையும் (1993), பழந்தமிழர் சமுதாயத்திலே மூட நம்பிக்கைக்கு எதிர்ப்பொலி (1994), நல்லை முருகப் பெருமான் திருக்கோயிலும் முருக பக்தர் நாவலர் பெருமானும் (1997), பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சியில் இலங்கையரின் பங்களிப்பு (ஆங்கிலம்) என்பன சிலவாகும். இவை மிக விரிவான தேடலுடன் கூடிய ஆய்வு நோக்கங் கொண்ட கனதியான கட்டுரைகள்.

ஆறுமுகநாவலர் மீது மிகுந்த மதிப்பையுடைய கலாநிதி பூலோக சிங்கம் நாவலர் தொடர்பான தமது எழுத்துக்கள் மூலம் ஆறுமுகநாவலர் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவரத் தூண்டுகோலாகத் திகழ்ந்தவர். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்று முயற்சியில் பேராசிரியரின் பங்களிப்பு முதன்மையானதாகப் பேசப்படுகின்றது. ஈழத்து இலக்கிய வரலாறு தொடர்பாக இவரால் பல்வேறு சந்தர்ப்பங்களிலே எழுதப்பட்டவை.

தொகுத்து நோக்கப்படும் போது தான் இவரின் ஆளுமை தமிழுலகிற்கு நன்கு தெரியவரும். இவரிடம் ஏராளமான நூல்கள் இருந்தன. அவையெல்லாம் ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி முருகன் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன என அவரின் புதல்வர் பூபாலன் கூறுகின்றார். இதுவும் தமிழ் ஆய்வாளருக்கு அரிய தகவலாகக் கூடும். பூலோசிங்கம் அவர்களின் கட்டுரைகள் தொகுக்கப் பட்டு வெளிவரச் செய்வது அவரின் மறைவின் பின்னரான தமிழ்ப்பணியென்று கூறலாம்.

**முருகேசு கௌரிகாந்தன்**
*ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

# யுத்தம் போதிக்கும் ஆட்சியில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியான ஓர் உளவியலுக்குள் சிக்கவைத்து மக்களை வாழப் பழக்கிவிட்டனர். எனவே எங்கள் உரிமைகளை கேட்டால் நாம் இருப்பவற்றையும் இழக்க வேண்டும் என்று பயந்தே உரிமைகளை இழந்து வாழ துணிந்துவிட்டனர்.

தனக்காகவும் தான் சமூகத்துக்காகவும் உரி மைகளை தட்டி கேட்பவன் சமூக எதிரியாகிறான். அவன் செய்வது சரி என்றும், அவன் மக்களுக்காக போராடுகிறான் எனத்தெரிந்தும், நாம் அவனை வெறுப்போம். இல்லையேல் அவனை வெறுக்க வைக்கப்படுவோம். வாழவேண்டும் என்ற ஆசை எங்களைத் துரத்த, தனிப்பட்ட ஆசைகளை நிறைவேற்ற எங்கள் மட்டத்தில் போராடுவோமே தவிர, பொதுநிலைக்கு வரமாட்டோம். இந்த இடம்தான் மக்களுக்கான போராட்டம் சரிவை சந்திப்பதும், போராடப் புறப்பட்டவர்கள் எதிரிகளாக மாற்றப்படுவதும், வெற்றிகரமாய் நடந்தேறும் இடம். ஆனால் காலப்போக்கில் அப்போராளிகளின் உண்மை நிலை நம்மத்தியில் நிலைபெற ஆரம்பிக்கும் ஆனா லும் பயனற்ற ஒன்றாகவே அது அமையும்.

போராட்டம் என்பது மக்களிடம் திணிக்கப்பட்டதாகவோ அல்லது அவசியமானதாகவோ இருக்கலாம். பொதுவாக போராட்டத்தை மக்கள் மத்தியில் ஆட்சியாளர்களே முன்னிலைப்படுத்துவர் அல்லது திணிப்பர். ஓர் இனத்தை வீழ்த்தவேண்டுமாயின் அவர்களின் முன்னேற்றமான இயல்புகள் மழுங்கடிக்கப்பட்டு பலவீனமான பக்கங்கள் ஊக் கப்படுத்தப்படும்.

ஈழத்தமிழன் அறிவினால் உயர்ந்தான் என்றால் அது வீழ்த்தப்பட்டு பணத்தாசை புகுத்தப்பட்டது. மேல்நாட்டு மோகம், ஆடம்பர வாழ்வு அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று போதையும் வன்முறையும் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டன. அவர்களை அவர்களே அறியாமல் அடிமையாகி அழிகின்றனர். புலம் பெயர்ந்த நாடுகளில் எங்களை நாங்கள் இனம் காட்ட முடியாமல் அல்லது இனம் காட்ட விரும்பாமல் நாங்களும் கரைந்து உருமாறிச்செல்கின்றோம். நாங்கள் யாரென்று எங்களுக்கும் தெரியவில்லை; எங்கள் பிள்ளைகளுக்கும் நாம் சொல்லவில்லை.



இது புலம்பெயர்ந்ததால் வந்ததல்ல. வெள்ளையர்கள் ஈழத்தில் காலூன்றிய காலத்தில் புகுத்திவிட்ட மனநிலை. ஆதலால்தான், எங்கள் மூத்தோர் ஆங்கிலத்தில் பேசுவது பெருமை என்றும் அக் கலாசார உடைகளுக்கு மதிப்பளித்தல் சிறப்பென்றும் நமக்கு வழிகாட்டுகின்றனர். ஒரு காலத்தில் தமிழ் பேசும் பண்டிதர்கள் தரம் தாழ்ந்து பார்க்கப்பட்டதாலும், அவர்கள் அணிந்த வேட்டி, சட்டை இழி வாக கணிக்கப்பட்டதாலுமே பள்ளிகளில் மட்டுமல்ல, எங்கள் மக்களிடமிருந்தே அவை விடைபெற ஆரம் பித்தன என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை.

தமிழர்கள் தனித்துவம் பேணிவாழப் பெருமளவு நாட்டம் கொள்ளவில்லை. சிங்களர் தங்களை விட்டுக்கொடுத்து வாழவும் விரும்பவில்லை, தமிழன் ஆள்வதையும் விரும்பவில்லை. தங்களுடன் சமமாய் வாழ்வதையும் ஏற்கவில்லை. இதனால் ஈராயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட இலங்கையில் இரண்டு இனங்கள் இணங்கி வாழமுடியவில்லை.

புத்தம் போதிக்கும் நாட்டில் யுத்தம் நடக்கின்றதேதவிர அன்புநெறிநிலைக்கவில்லை அல்லது அரவணைத்துச் செல்லவில்லை. தமிழ் மக்களைக் கொல்லத்தயங்கவில்லை. மக்களாட்சி நடக்கின் றதாம். ஆனால், தமிழ்ச்சனம் மன அமைதியுடன் வாழவழியில்லை. இது நாடாளுமன்ற அரசியலின் தோல்வி என யாரும் ஏற்கவும் இல்லை. உயிர் போகிறது என்று உரத்துக் கத்தியும் உதவிக்கு ஆளில்லை. ஜனநாயகம் கூட சத்தம் போடாது தூங்கிவிட்டது. சமாதானம் சொல்லும் நல்லோர்கூட உயிர்காக்க வரவில்லை. இப்படியான எதிர்காலம் எமக்கு வந்துவிடக்கூடாது என்று முன்னே சிந்தித்து போராடியவர்கள் மத்தியில் நினைவு கொள்ளப்படவேண்டிய பிரதான போராளி திலீபன்.

விடுதலைப்புலிகள் ஆள ஒருநாடு அல்ல தமிழ் மக்கள் வாழ ஒருநாடு வேண்டும் என்று முழங்கினான். நீரின்றி வாழாது உலகு, உணவின்றி வாழாது உயிர்கள். இறப்பேன் என்று தெரிந்தே இருந்தான் உண்ணாநோன்பு அப்போதும் உறுதியுடன் சொன்னான் நான் இறந்தபின் தமிழ் மக்கள் விடுதலை பெற்று வாழ்வதை வானத்திலிருந்து பார்ப்பேன் என்று. ஆயுதமேந்தி போராடிய வீரன், உறுதியான போராளி, உண்ணாநோன்பிருந்து உயிரீந்த பெருவீரன். தமிழரால் ஒவ்வொரு நாளும் நினைக்கப்பட வேண்டியவன்.

ஆனால் செப்ரெம்பர் மாதம் கண்டிப்பாக நினைக் கப்படவேண்டியவன். காரணம் அவன் உண வொறுத்து தமிழர்க்காய் உயிர்க்கொடை தந்த மாதம் இது. எம்சந்ததிக்கு அவன் கதையை மறக் காமல் சொல்லி வைப்போம். வேலையும், பணமும் பெரிதென்று போராடி, பிள்ளைகளுக்கும் அதனையே பயிற்றுவிக்கும் நாம், 'திலீபன் இறந்துவிட்டான், இருந்தாலும் ஈழத்தமிழ் மக்கள் நிலைமாறவில்லை, இன்னும் சமூகநேசர்கள் தோன்றுவார்கள், திலீபனின் குறிக்கோளும் வெல்லும்' – என்று எம்பிள்ளைகட்கும் சொல்லி வைப்போம்.

ஈராயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட நாடு இலங்கை. இருப்பினும் இரண்டு இனங்கள் இணங்கி வாழ முடியாது சண்டையிடும் பூமி. புத்தம் போதிக்கும் ஆட்சி. ஆனால் நித்தம் தமிழர்களுக்கு சோதனை. அன்புநெறி கூறினாலும், அடக்குமுறைக்கு குறைவில்லை.மக்கள் ஆட்சி எனினும் தமிழ்மக்கள் வாழவழி கிடைக்கவில்லை. இது நாடாளுமன்ற அரசியலின் தோல்வி என யாரும் ஏற்கவும் இல்லை. உயிர் போகிறது என்று உரத்து கத்தியும் உதவிக்கு ஆளில்லை. உலக ஜனநாயகம் கூட சத்தமின்றி அமைதியாகிவிட்டது.

இப்படியான எதிர்காலம் எமக்கு வந்துவிடக் கூடாது என்று முன்னே சிந்தித்து போராடியவர்கள் மத்தியில் மறக்கமுடியாத போராளி திலீபன். விடுதலைப் புலிகள் ஆள ஒரு நாடு அல்ல, ஈழத் தமிழ் மக்கள் வாழ ஒரு நாடு வேண்டும் என்று முழங்கினான். ஆயுதமேந்தி களத்தினில் போராடியமை மட்டுமன்றி, ஈழத்தமிழ் மக்களுக்காக வீரத்தின் உச்ச நிலையான உண்ணாநோன்பிருந்து உயிரீந்த பெருவீரன். உணவொறுத்து, தமிழர்க் காய் உயிர்க்கொடை தந்து, விடுதலையை விரும்பிய வீரன் திலீபன். திலீபனின் உடலில் இருந்து உயிர் நீங்கியிருப்பினும் அவன் குறிக்கோள் வெல்லும்.

# பொன்சேகா, மைத்திரி நல்லவர்களெனில் கோட்டாபயவை ஏன் ஆதரிக்கக்கூடாது?

## கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ் தேவானந்தா

(எஸ்.நிதர்ன்)

யாழ்ப்பாணம், செப். 26

யுத்தத்தை வழிநடத்திய சரத் பொன்சேகா மற்றும் மைத்திரிபால சிறிசேனா நல்லவர்கள் என அவர் களை ஆதரிக்கலாம் என்றால் கோட்டாபயவை ஏன் ஆதரிக்க முடியாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

யுத்தத்தை வென்றவர்கள் தாங்கள் தான் என்று இறுதி யுத்தத்தின்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார். அதே நேரம் யுத்தத்தை வழிநடத்தி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர் தானே என அப்போதைய இராணுவத் தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன் சேகா கூறுகின்றார்.



இந்த இருவரும் கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவர்களை ஆதரித்து தமிழ் மக்களிடம் வாக்குகளையும் கேட்டு பெற்றுக் கொடுத்தது. மைத்திரிபால சிறிசேன மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருக்கு ஆதரவை வழங்கலாம் என்றால் யுத்தத்தின்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்தவரும் இப்போது ஜனாதிபதி வேட்பாளராகவும் உள்ள கோட்டாபயவுக்கு ஏன் ஆதரவளிக்கக் கூடாது?

இது மட்டுமல்லாமல் இன்றைக்கு தாமே யுத்தத்தை வென்றவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றவர்களுக்கும் தமிழ் மக்களுக்கு எதனையுமே செய்யாதவர்களுக்குமே கூட்டமைப்பு ஆதரவை வழங்கி வருகின்றது. மற்றவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு முன்னர் அவர்கள் தங்களைத் தாங்களே பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் – என்றார். (ஐ – 07)

## வல்லைக் கடல் நீரேரியில் முதியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 26

முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்த மனநலம் குன்றிய முதியவர், வல்லைப் பாலத்துக்கு அண்மையாக கடல்நீரேரியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 68 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லைப் பாலத்துக்கு அண்மையாக கடல்நீரேரியில் ஒருவரின் சடலம் தலைக்குத்தாகக் காணப்படுவதாக நேற்றுக் காலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று நண்பகல் நீதிவான் முன்னிலையில் சடலத்தை மீட்டனர்.

இதன்போதே அந்த நபர் உடுப்பிட்டி முதியோர் இல்லத்திலிருந்து காணாமல் போயிருந்த மனநலம் குன்றிய முதியவர் என அடையாளம் காணப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பயங்கரவாதிகளை ஊட்டி வளர்த்தது மஹிந்த அரசே!

### அஸாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 26

பயங்கரவாதிகளையும் அடிப்படைவாதிகளையும் மஹிந்த அரசே போஷித்து வந்துள்ளது. சஹ்ரான், பொட்டு அம்மான் ஆகியோரை போஷித்து வந்ததாகத் தெரிவிக்கும் கெஹலிய ரம்புக்வெல்லவின் கூற்று தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்த வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன் தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–



நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பிரதானமாகக் கொண்டு பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை நியமித்துள்ளது. அவர்களின் தேர்தல் பிரசாரங்களிலும் ஏப்ரல் 21 தாக்குதலுடன் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது என்றும் அதனைச் சரியான முறையில் முன்னெடுக்க கோட்டாபயவால் மாத்திரமே முடியும் என்றும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் ஏப்ரல் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் உள்ளிட்ட குழுவுக்குச் சம்பளம் வழங்கி அவர்களைப் போஷித்து வந்தது கடந்த அரசு எனக் குற்றப்புலனாய்வு விசாரணைகளில் இருந்து தகவல்கள் வெளிவந்திருந்தன. என்றாலும் அது தொடர்பில் உறுதியாக தெரிவிக்க முடியாமல் இருந்த நிலையில், தற்போது அவர்களின் ஜனாதிபதி வேட்பாளரின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல அதனை உறுதிப்படுத் தியுள்ளார் – என்றார்.

## யோசித மீண்டும் கடற்படையில்!

### ஜனாதிபதியின் பணிப்பை அடுத்து

கொழும்பு, செப். 26

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கடற்படையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட லெப்டினன்ட்



யோசித ராஜபக்ஷ கடற்படையில் மீளவும் இணைக்கப்பட்டுள்ளார்.

அவரை 2016ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் மீளவும் கடற்படையில் இணைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பரிந்துரைக்கு அமைவாக அவர் கடற்படையில் மீள இணைக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில், 2016ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதியில் இருந்து லெப்.யோசித ராஜபக்ஷ சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

அன்றைய தினத்தில் இருந்து அவரை மீள இணைக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனும், கடற்படை அதிகாரியுமான லெப்.யோசித ராஜபக்ஷ, 2016ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சி.எஸ்.என். தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்காக அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாத காலத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதிய ‘கோட்டாபய’சுயவரலாற்று நூல் வெளியீடு



கொழும்பு, செப். 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவின் சுயவரலாற்று நூலான, ‘கோட்டாபய’ கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு தாமரைத் தடாகம் அரங்கில் இந்த நிகழ்வு கடந்த திங்கள் மாலை இடம்பெற்றது.

இந்தநூலை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதியுள்ளார்.

இவர் ஏற்கனவே, போர் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய நந்திக்கடலுக்கான பாதை, கடொல் எத்து, உத்தர தேவி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

‘கோட்டாபய’ என்று பெயரிடப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் சுயவரலாற்று நூலின் முதல் பிரதி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விடம், மேஜர் ஜெனரல் கமல் கருணாரத்ன வழங்கினார்.

இங்கு உரையாற்றிய மேஜர் ஜெனரல் கமல் கருணாரத்ன, கோட்டாபய ராஜபக்ஷ போருக்குப் பயந்து இராணுவத்தை விட்டு ஓடியவர் என்பதே அவரை எதிர்ப்பவர்களின் பிரதான குற்றச்சாட்டாக இருப்பதாகவும், ஆனால் அவர் முன்னுதாரணம் கொண்ட ஒரு தொழில்சார் இராணுவவீரர் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கோட்டாபய வழிநடத்திய பற்றாலியனும் இன்னொரு பற்றாலியனும் முன்னேறிக் கொண்டிருந்தபோது, மற்ற பற்றாலியனை முந்திக் கொண்டு சென்ற கோட்டாபய ராஜபக்ஷவின் பற்றாலியனை பின்னுக்கு வருமாறு உத்தர விடப்பட்டதாகவும், அதனால் அன்றைய சண்டையில் 90 வரையான படையினரை இழக்க நேரிட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடுதிரும்பிய கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக, இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது எல்லாவற்றையும் சரியான இடத்தில் நிறுத்தி நாட்டைப் பாதுகாத்தார் என்றும் அவர் கூறினார்.

அமைதிப் பேச்சு காலத்தில் இராணுவம் உலகின் மிக அவமானகரமான ஒன்றாக இருந்தது. இராணுவம் அதிகபட்ச சகிப்புத்தன்மையைக் கொண்



டிருந்தது. அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவே, விமானப்படை போதுமான போர் விமானங்களைக் கொண்டிருப்பதையும்,அனைத்துப்படைகளுக்கும் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் திறன் இருப்பதையும் உறுதி செய்தார். கோட்டாபய ராஜபக்ச ஒரு முன்மாதிரியான தொழில்முறை இராணுவ மனிதர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வடக்கு - கிழக்கில் பௌத்தம் புறக்கணிப்பு அங்கே எங்களுக்கும் சம உரிமை உண்டு!

## அதனாலேயே களமிறங்கினேன் என்கிறார் ஞானசாரர்



கொழும்பு, செப். 26

இந்து, பௌத்த மோதலை உருவாக்க நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால், நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் செயற்படும் சட்டத்தை வடக்கு -கிழக்கில் மாத்திரம் தட்டிக்கழிக்க முயற்சிப்பதே முரண்பாடாக உள்ளதெனக் கூறியிருக்கின்றார் பொதுபல சேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

நீதிமன்றத் தீர்ப்பு தாமதமாகவே தேரரின் பூதவுடலைத் தகனம் செய்தோம் என்றும் கூறியுள்ளார்.

நீதிமன்ற உத்தரவையும் மீறி, செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் கொலம்பே மேதாலங்கார தேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது தமிழ் மக்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது. இந்த சட்டவிரோத நடவடிக்கையை ஞானசார தேரரே வழிநடத்தியிருந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஞானசாரர் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தெரிவிக்கையில் –

இந்து – பௌத்த மக்கள் மத்தியில் இன முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கம் எம்மிடம் இல்லை. கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ், சிங்கள மக்கள் மிகவும் நல்ல உணர்வுடன் ஆலய, மத நடவடிக்கைகளை முன்னெடுத்து ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றனர். ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரம் அந்த நிலைமை இல்லாது பௌத்தம் புறக்கணிப்பட்டு, இனவாதம் பரப்பப்பட்டு, அரசியல் சுயநலம் காரணமாக முரண்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அது மட்டுமல்ல, அந்த பகுதி பௌத்த விகாரைக்குரிய நிலமாகும். இந்துக்களுக்கு எவ்வாறு அங்கு சகல உரிமைகளும் உள்ளனவோ, அதேபோல பௌத்தர்களுக்கும் சம உரிமைகள் உள்ளன. அங்கு எமது தேரர் ஒரு வருக்கு நெருக்கடி என்றால் எம்மால் வேடிக்கை பார்க்க முடியாது. இந்த நாட்டில் பௌத்த, சிங்கள முதன்மைத்துவம் அரசமைப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், அது வடக்கு – கிழக் குக்கு பொருந்தாது என்றே அவர்கள் நினைக் கிறார்கள். இந்த விடயத்தில் சட்டத்துறையை நாடிய சட்டத்தரணிகளும் அவ்வாறான ஒரு பிரிவினைவாத நிலைப்பாட்டில் இருந்தே வாதாடவும் முன்வருகின்றனர். இதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறான பிரிவினைகளைத் தூண்டி நாட்டில் இல்லாத பிரச்சினைகளை உருவாக்குகின்றனர். இவ்வாறான நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவாக இருந்தாலும் நாம் எமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம் – என்றார்.

கேள்வி: எனினும் யுத்தத்திற்கு பின்னர் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்த ஒரு பகுதியில் விகாரை அமைத்து பழைமை வாய்ந்த விநாயகர் ஆலயப் பகுதியை புறக்கணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதென்ற நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் உள்ளதே?

பதில்: யுத்தகாலத்தில் கைப்பற்றுவதாகக் கூறப்படுவது தவறு. இங்கு மேதாலங்கார தேரர் நீண்ட காலமாக இருந்தார். ஏன் வடக்கு – கிழக்கில் விகாரைகளை அமைக்கக் கூடாதா? அதனையா தமிழ்ச் சமூகம் சார்பில் வலியுறுத்துகிறீர்கள்?

கேள்வி: இல்லை. இந்து ஆலய வளாகத்தில் தகனம் செய்ததையே தவறென மக்கள் கூறுகின்றனர். இது இந்துகளை வேதனைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதே?

பதில்: ஆலயத்தில் அப்படி நடந்து கொள்ளவில்லை. விகாரைக்கு உரிய இடத்திலேயே நாம் அவ்வாறு செய்தோம். அத்துடன் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. தீர்ப்பு வரும் வரை உடலை வைத்திருக்க முடியாது. இதனால் அவசரமாகத் தகனம் செய்தோம். இதை இந்து, பௌத்த மோதலாகப் பார்க்க வேண்டாம். (ஐ)

# யாழ்.சட்டத்தரணிகள் நளைவரை சேவைப் புறக்கணிப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு மாகாண சட்டத்தரணிகளின் சேவைப் புறக்கணிப்பு நாளை வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்ற நிலைப்பாட்டை ஏற்று ஆதரவளிப்பது என யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கமும் தீர்மானம் எடுத்தது.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் தலைவி ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்றச் சட்ட நூலகத்தில் இடம்பெற்றது.


இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை அவமதித்துச் செயற்பட்டமை மற்றும் கருத்து வெளியிட்டமை தொடர்பில் ஞானசார தேரர், அவர் சார்ந்த தரப்புகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனச் சட்டமா அதிபர் எழுத்துமூல உறுதி வழங்கவேண்டும்.

நாளை வெள்ளிக்கிழமைக்கு அல்லது அதற்கு முன்னர் சட்டமா அதிபர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்காவிடின் சேவைப் புறக்கணிப்பைத் தொடர்வது குறித்து மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் முல்லைதீவில் நேற்று முன்தினம் ஒன்றுகூடி அறிவித்திருந்தனர்.

அதனை ஆதரிக்கும் வகையிலேயே யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுப் புதன்கிழமை கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் ஒருவர் சிக்கினார்



மன்னார், செப். 26

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி திருக்கேதீஸ்வரம் வீதியில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை மற்றும் மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த வீதியில், மேற் கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கைகளின் போது ஓட்டோ ஒன்றில் பதுக்கிக் கொண்டு செல்லப்பட்ட ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

230 கிராம் எடை கொண்ட இந்த ஐஸ் போதைப்பொருளை கொண்டுசென்ற மன்னாரைச்சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் 10 லட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துலவீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2019 இல் வெளியிடப்பெற்றது.